Day Class
Physics: திரு. சத்தியசீலன்
Chemistry: திரு. கலீர்
Zoology: திரு. நாகநாதன்
Botany: திரு. குமாரதாஸ்
Pure & Applied Maths: திரு. நவீனதாஸ்
New Master Institute
B.M.C. Lane, Jaffna.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ.2/-

நடைபெறுகிறது!
A/L 87Day Class
பிரிவு II
8.00 - 9.00 PHYSICS
9.00 - 10.00 CHEMISTRY
10.00 - 11.00 ZOOLOGY
11.00 - 12.00 BOTANY
10.00 - 12.00 (PURE & APP (MATHS
New Master Institute
B.M.C. Lane, Jaffna.

மலை:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ ஐப்பசி மீ 1 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 13 (18-10 1986) SANJEAVY. REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :39

## கருத்துக் கலசம்

மயூரா

இ. போ. ச. என்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை, ஆரம்பத்தில் போக்குவரத்துத் துறையில் பெரும் மாற்றத்தைக் கொண்டுவந்தது. ஆனால் காலகதியில் 'இதில் போவது சங்கடம்' என்ற நிலை உருவானது. இப்போது சமுதை தேய்ந்து கட்டெறும்பான அளவுக்கு வந்து விட்டது.

அது ஒன்பது சபைகளாகப் பிரிக்கப்பட்டும் மக்களுக்கு சிரான சேவை கிடைக்கவில்லை. சபைகளுக்கு லாபமும் இல்லை.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையைப் பொறுத்த மட்டில் எல்லா வகைகளாலும் அது ஒரேயடியாகக் கீழே விழுந்து விட்டது!

அதனைத் தூக்கி நிறுத்தும் கைங்கரியங்களில் ஒன்றாக சுய விருப்பத்தின் பேரில் ஊழியர்கள் பதவி விலகுவதற்கு வகை செய்யப்பட்டது.

அதன்நிமித்தம் 405 ஊழியர்கள் இம் மாதம் 1-ம் திகதி தொடக்கம் பதவி விலகி விட்டார்கள்.

அந்தோ பரிதாபம்! அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட நஷ்டஈடோ, சாதாரணமாக வழங்கப்படும் சேவைக் காலப் பணமோ கொடுக்கப் படவில்லை. அது எப்போது தரப்படும் என்பது குறித்தாவது எழுத்து மூலமான உத்தரவாதமும் இல்லை.

உலக வங்கி கொடுத்த நிதி உதவியை கரைத்து விட்ட நிலையில் மத்தியபோக்குவரத்துச் சபையும் கலைக்கப்பட்ட நிலையில் வ. பி. போ. சபை ஊழியருக்கு நஷ்டஈடு கொடுக்கவும் சேவைக்காலப் பணம் வழங்கவும் எங்கிருந்து நிதி வரப் போகிறது? எப்படி, எப்போது, வரப்போகின்றது?

இவற்றைப் பற்றிய சிறிய நம்பிக்கைக் கீற்றுத்தானும் இல்லாமல் சம்பந்தப்பட்ட 405 பேரும் பதவியை

(8-ம் பக்கம் பார்க்க)

● குமுதினி, தூயஒளி பயங்கரங்களின் தொடராக புங்குடுதீவில்

# கடலில் வைத்து 13 தமிழர்

# குத்தி, குதறி கோரக் கொலை!

## ரி.வி;டெக், கஸெட் போன்ற பெறுமதிப் பொருள்கள் கொள்ளை

— அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜ சிங்கம் —

யாழ்ப்பாணம், அக்டோபர். 18

புங்குடுதீவு, குறிகட்டுவான் கடற்பகுதியில் வைத்து படகில் சென்ற 13 தமிழர்கள் குத்தியும் வெட்டியும் குதறியும் கோரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

குமுதினி, தூயஒளிப் படகுகளில் சென்றவர்களைக் கொடூரமாகக் கொலை செய்த அதே பாணியில் இந்த மூன்றாவது பயங்கரச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றிருக்கின்றது.

அரக்கத்தனமான இந்த வெறியாட்டத்தை கடற்படையினரே செய்தார்கள் என்று மிக நம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

படகில் சென்றவர்கள் இந்தியாவுக்கு எடுத்துச் சென்றதாக நம்பப்படும் ரி. வி. டெக், கசெட் போன்ற விலையுயர்ந்த பொருள்களை கடற்படையினர் கொள்ளை அடித்தனர்.

படகில் சென்ற இருவரை அவர்கள் கைது செய்து அழைத்துச் சென்றனர். கொலை செய்யப்பட்டவர்களில் சிலர் முஸ்லிம்கள் என்றும் அறியவருகிறது.

குருநகர் துறையிலிருந்து புதன்கிழமை மாலை புறப்பட்டவர்களே இக்கதிக்குஆளானார்கள்.

இச் சம்பவம் குறித்து அறியப் படுவதாவது:-

குறிகட்டுவான் கடல் பகுதியில் வைத்து அவர்களை வழிமறித்த கடற்படையினர் குறிகட்டுவான் பாலத்துக்கு அருகாமை வரை அவர்களைக் கொண்டுவந்தனர்.

அங்கு வைத்து அவர்களை கத்தியால் குத்தியும் குதறியும் கொலை செய்தனர்.

கொலையுண்டவர்களின் சடலங்களைப் படையினர் எடுத்துச் சென்றனர்.

கொலையுண்டவர்கள் சென்றதாகக் கூறப்படும் படகு இரத்தக் கறைகளுடன் நெடுந்தீவுக் கரையில் ஒதுங்கியது.

படகு உரிமையாளர் நெடுந்தீவைச் சேர்ந்தவர் என அறியப்படுகிறது.

கடந்த வருடம் மே மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவுக் கடல் பகுதியில் பச்சைக் குழந்தை ஒன்று முதல் 84 வயோதிபர் வரை 35 தமிழர்கள் கோரமாக வெட்டியும், குத்தியும், சுட்டும் கொல்லப்பட்டனர் என்பதும்–

கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி மண்டைதீவு கடல் பகுதியில் 'தூய ஒளி' படகில் வைத்து 31 தமிழ் மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்பதும் தெரிந்ததே. (அ-உ-10)

● முல்லைத்தீவில்

## பீரங்கித் தாக்குதல் படகில் சென்ற இருவர் பலி

யாழ்ப்பாணம், அக். 18

முல்லைத்தீவு கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்த படகு ஒன்றின் மீது கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் படகில் சென்ற இருவர் கொல்லப்பட்டதாகவும் ஒருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பி நீந்திக் கரை சேர்ந்ததாகவும் தெரிய வருகிறது.

இச் சம்பவம் நேற்றுக் காலை நடைபெற்றது.

படகு முற்றாக சேதமடைந்ததுடன் படகில் இருந்த பொருள்களும் கடலில் மூழ்கிப் போயின

இத் தாக்குதலையடுத்து இப் பகுதி மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அச்சம் தெரிவிக்கின்றனர். (உ-10)

### சுபநேரம்

18-10-1986
சனிக்கிழமை
சுபநேரம்:
3.02 முதல் 4.32 வரை
ராகுகாலம்:
9.02 முதல்10.32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## நீடிப்பு

யாழ்ப்பாணம், அக். 18

யாழ் - ஆஸ்பத்திரி டாக்டர்கள், ஊழியர்கள் ஒருவாரகாலமாக மேற்கொண்டு வரும் தொடர் எதிர்ப்பியக்கப் போராட்டம் திங்கட்கிழமை வரை நீடிக்கப் பட்டுள்ளது. (உ-10)



## வித்தியாசம் தெரிகிறதா?

வித்தியாசம் தெரிகிறதா?.

மாதகலைச் சேர்ந்த பரம்குமாரை (வயது19) படத்தில் காண்கிறீர்கள். அவரின் கால்களில் வித்தியாசம் தெரிகிறதா?.

அவரின் ஒருகால் உண்மைக்கால். அடுத்தது செயற்கைக்கால்–ஜெய்ப்பூர்க் கால். விவரத்துக்கு இரண்டாம் பக்கத்தைப் புரட்டுங்கள் (உ)

அக்டோபர் 24-ஆம் திகதி

## ஐ, நா, தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்குக

### அன்னையர் முன்னணி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், அக்.18

ஸ்ரீலங்கா அரசபடையினரின் பண்பாட்டு, இனப் படுகொலைகளைக் கண்டித்தும், அதனை ஐ.நா. வின் உறுப்பு நாடுகளுக்கு எடுத்துக் காட்டவும் எதிர்வரும் ஐ. நா. தினத்தை கரி நாளாக அனுஷ்டிக்குமாறு அன்னையர் முன்னணி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இலங்கையில் நிகழும் மனித உரிமை மீறல்கள், இனப்படுகொலை மற்றும் பண்பாட்டுப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ஐ. நா. வும் அதன் உறுப்பு அமைப்புக்களும் தவறி விட்டமையை வன்மையாக ஆட்சேபிப்போம்.

ஆகவே ஐ. நா. தினமான எதிர்வரும் 24 ஆம் திகதியன்று சகல கட்டிடங்களிலும், தொழில் நிலையங்களிலும், வாகனங்களிலும் கறுப்புக் கொடிகளைப்பறக்கவிட்டு ஒவ்வொருவரும் கறுப்புப் பட்டி அணிந்தவர்களாக அவரவர் பணிகளில் ஈடுபடவேண்டுகிறோம். –

இப்படி அன்னையர் முன்னணி விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், அக். 18

திருத்த வேலைகளுக்காக பண்டிதர் சரணாலயம் ஒரு வாரகாலம் வரை மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-எ)

## வயோதிப மாது, 2 சிறுமியர் படையினர் சூட்டுக்குப் பலி

### பெரியதம்பனைக் கிராமத்தில் சம்பவம்

வவுனியா, அக். 18

வவுனியா, பெரிய தம்பனைக் கிராமத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை ஆயுதப்படையினர் நடத்திய தேடுதலின்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு வயோதிப மாது இரண்டு சிறுமிகள் உயிரிழந்தனர்.

வீடு வீடாக நடத்தப்பட்ட தேடுதலின்போது வீடு ஒன்றுக்குள் வைத்து இவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கானார்கள் என்று சொல்லப்படுகின்றது.

நான்கு பேர் காயமடைந்தனர் என்றும் தெரிகிறது.

இத் தேடுதலின்போது பொம்பர் தாக்குதலும் அப்பகுதியில் இடம்பெற்றன. இதனால் 80 க்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்தன என்று தகவல்கள் வந்துள்ளன.

பெரிய தம்பனைக்கு கடந்த திங்கள் இரவு நடந்து சென்ற சுமார் ஐநூறு சிப்பாய்கள் மறுநாள் தேடுதலில் ஈடுபட்டனர். அச் சமயம் தான் இச் சம்பவங்கள் இடம் பெற்றன.

இதனால் 82 குடும்பங்கள் பூவரசங்குளம் மகா வித்தியாலயத்திலும் 40 குடும்பங்கள் பெரிய தம்பனை சென். அந்தோனியார் தேவாலயத்திலும் எஞ்சியோர் மடுக்கோயிலிலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருக்கின்றனர்.

இவர்களின் நலன்கள் பற்றிக் கவனிக்க செட்டிகுளம் உதவி அரச அதிபரும் குடியேற்ற அதிகாரியும் அப்பகுதிக்கு நேற்று விரைந்து சென்றனர்.

அப்பகுதியில் இருந்த குடியேற்ற அதிகாரியின் பங்களாவும் குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டதாகத் தெரிகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த மூவரின் பெயர்கள் வருமாறு;

1. கார்த்திகேசு அழகம்மா, வயது 70 (பெரிய தம்பனைப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கார்த்திகேசுவின் மனைவி இவர்.)

2. குமாரசுவாமி என்பவரின் 7 வயது மகள்.

3. தர்மலிங்கம் என்பவரின் 10 வயது மகள்.

காயமடைந்தவர்கள் விவரம் வருமாறு;

1. கார்த்திகேசுவின் மகள் அம்பிகை கௌரி வயது 19.

2. குமாரசாமியின் 26 வயது மகள்.

3. சபாபதி தவம், 26 வயது.

4. புண்ணியமூர்த்தி மஞ்சுதன்–5 வயது.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-எ)

உதவி வழங்குவது குறித்து ஆராய

## அமெரிக்க எம். பிக்கள் இலங்கை வருகிறார்கள்

வாஷிங்டன், அக், 17

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அமெரிக்க செயல்பாடுகள், அமெரிக்க உதவி ஆகியவை குறித்து ஆராயுமுகமாக 9 பேர் கொண்ட அமெரிக்க நாடாளுமன்றத் தூதுக்குழு 3 நாள் விஜயம் ஒன்றை மேற் கொண்டு நவம்பர் 26 ஆம் திகதி கொழும்பு வரும்.

தூதுக்குழுவுக்கு அமெரிக்க நாடாளு மன்றத்தின் ராஜாங்க வர்த்தக, நீதித்துறை உபகுழுவின் தலைவர் நீல்ஸ்மித் தலைமை வகிப்பார்.

''வொய்ஸ் ஒப் அமெரிக்கா''வின் நிலையம் ஒன்றை புத்தளத்தில் நிறுவுவதில் ஏற்பட்டுள்ள தாமதம்—

திருகோணமலையில் இரண்டாவது சர்வதேச விமானநிலையம் ஒன்றை நிறுவுவதில் அமெரிக்க போயிங் கம்பெனியுடன் உள்ள தொடர்பு - ஆகியன குறித்து இத்தூதுக் குழு, ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் பேச்சுக்களை நடத்தும் என்று தெரிகிறது.

வடயேமனில் இருந்து அமெரிக்க விமானம் ஒன்றிலே நேரடியாகக் கொழும்பு வரும் இத்தூதுக் குழு, நவம்பர் 28 ஆம் திகதி புதுடில்லி பயணமாகும். (உ - எ)

## லலித் ஊர்ஜிதம்!

கொழும்பு, அக்:18

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு உதவ அமெரிக்கா முன்வந்து உள்ளது.

—தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தியத்தலாவையில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் இதனை ஊர்ஜிதப் படுத்தினார்.

—இலங்கை அரசு சமர்ப்பித்த சமாதான யோசனைகளைக் கருத்திற்கு எடுத்துக்கொண்ட பின்னர்தான் அமெரிக்க அரசு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளது.

தற்போதைய இனப் பிரச்சினைப் பேச்சுக்களில் கலந்து கொள்ளுவது குறித்து இன்னும் இரண்டு வாரங்களுள் முடிவு எடுக்க வேண்டிய நிலையில் தீவிரவாதிகள் இருக்கிறார்கள்.

அரசின் சமாதான முயற்சிகள் தோல்வி அடையுமானால் தேவையான மாற்று நடவடிக்கைகளை எடுக்க அரசு தயங்காது — இப்படி அமைச்சர் அத்துலத் முதலிசொன்னார். (உ-எ)

## நிலக்கண்ணி கான்ஸ்டபிள் பலி

மட்டக்களப்பு, அக். 18

வாழைச்சேனையில் கடந்த வியாழன் பிற்பகல் இடம்பெற்ற நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்தார். 5 பொலீஸார் காயமடைந்தனர்.

உயிரிழந்த பொலீஸ் கான்ஸ்டபிளின் பெயர் நிமால் சந்திரதிலக. பழைய பொலீஸ் நிலையத்துக்கு அருகே இச்சம்பவம் இடம் பெற்றது. (உ-எ)

## முகாமுக்கு அருகே சென்றவர்பலி

யாழ்ப்பாணம்,அக்.18

பலாலி இராணுவ முகாமுக்கு அருகிற் சென்ற நபர் ஒருவர் பலாலி முகாமில் இருந்து மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமானார்.

இச் சம்பவம் வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

மரணமானவரின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ்—ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ - 10)

குதூகல ஆரம்பம்!
18-10-1986
சனிக்கிழமை
ஜவுளி உலகின் புதிய சங்கமம்
Mummy Daddy ®
★ மம்மி டடி ★
100, கண்டி வீதி,
சாவகச்சேரி.

இதோ...!
மீண்டும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி
HAPPY TEXT
திருமணம் போன்ற மங்கள வைபவங்களுக்கு ஏற்ற:-

| | |
|---|---|
| காஞ்சிபுரம் | கோடம்பாக்கம் |
| மணிப்புரி | நாக்கீஷ் |
| பெனாரிஸ் | காஷ்மீர் காதலி |
| சிலோன் மணிப்புரி | ரேவதி செலக்ஷன் |
| காஷ்மீர் | சாறி குயீன் |
| உறையூர் | கொம்பியூட்டர் |
| சேலை வகைகட்கும் | போன்ற ஏனைய சாறி வகைகட்கும் |

பட்டு வேஷ்டி, பட்டுப் பாவாடை
பட்டுச் சேலைக்கரை
போன்ற ஏனைய தேர்வுகட்கும் உடனடியாக நாடுங்கள்
HAPPY TEXT
இன்று யாழ்நகரில் பட்டுத் தேவைகட்கென்று மிகவும் தலைசிறந்த ஸ்தாபனமாக விளங்குவது
ஹப்பி ரெக்ஸ்ற்
149, 168, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24197, 22056

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபிணமானோரை நடமாட வைக்கும் ஜெய்ப்பூர் செயற்கைக் கால்

ஒரு கால் இழந்தவர்கள்; ஒருக்கால் இரு காலுமே இழந்தவர்கள்; இதனால் எதிர்காலத்தையே இழந்தவர்கள்; இவர்கள் அனைவருக்கும் இழந்த காலை மீண்டும் வழங்கி வாழ்வில் இவர்கள் சொந்தக் காலில் நிற்பதற்கான ஒரு பிடிப்பை ஏற்படுத்துகிறது ஜெய்ப்பூர் செயற்கைக் கால்.

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பார்வைக்கு அசல்கால் போன்றே காட்சி அளிக்கிறது.

முதன்முதல் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தப்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் இளைஞர் செல்வன் பரமசாமி பரம்குமார்.

இவரையும் இவரது குடும்பத்தினரையும்மாதகலில் உள்ள இவரது இல்லத்தில் சஞ்சீவி வாசகர் சார்பில் பேட்டி காணும் வாய்ப்புக் கிடைத்தது.

**15 வயதில்**

முதலில் பரம்குமாரின் தாயாரிடம் மகன் பற்றி வினவினேன்.

"பதினைந்து வயதில் (1982இல்) மா மரத்தில் மாங்காய் ஆய்வதற்காக ஏறி விழுந்து தனது காலை முறித்துக்கொண்டான் பரம். கால் முறிவுக்கு புக்கை சட்டினோம்.

அதில்என்னபிழையோ தெரியாது; 9 நாள் மலேரியாக் காய்ச்சலில் மகன் படுத்திருந்தார். இதனால் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மகனைக் காட்டினோம்.

அவர்கள் அவனது கால் சிறிது சிறிதாக அழுகுவதாகக் கூறி அவனது காலை அகற்றவேண்டும் எனக் கூறி அகற்றி விட்டனர்.

இப்போது ஆண்டவன் புண்ணியத்தால் மீண்டும் அவனுக்கு கால் கிடைத்து விட்டது..." கலங்கிய கண்களோடு சொன்னார் தாயார்.

துள்ளித் திரிகின்ற வயதில் கால் துண்டாடப்பட்டு துவண்டுபோய் இருந்த மகனைப் பார்த்து துளிர்த்த கண்ணீரைத் துடைத்த அதே முந்தானை;

வைத்திய சாலையில் கால் அகற்றப்பட்டவுடன் கலங்கிய மகனின் கண்ணீரைத் துடைத்த அதே முந்தானை;

இன்று மீண்டும் மகன் கால்பெற்று துள்ளித்திரிவதை நினைத்து துளிர்த்த ஆனந்தக் கண்ணீரையும் துடைக்கிறது.

**தந்தை கூறுகிறார்**

தந்தை பரமசாமியிடம் மகன் பற்றி விசாரித்தபோது;

'ஐந்து பெண்பிள்ளையளுக்கு ஒருபெடியனைப் பிறந்தவன் பரம். அவனுடைய காலை அகற்றினதோடை நாங்கள் சரியாகக் கவலைப்பட்டம். அதற்கெல்லாம் சேர்த்து இப்ப சந்தோஷப்படுகிறோம்' என்றார்.

தள்ளாத வயதில் தன்னை வைத்துக் காப்பான் மகன் என நினைக்க; பொல்லாத நோய் வந்து மகனைப் பொல்லூன்றி நடக்க வைக்க கவலைப்பட்ட தந்தையின் முகத்தில் இன்று முழுமையான சந்தோஷம் வந்து முகாமிட்டிருப்பதைக் காணமுடிந்தது.

அடுத்ததாக பரம்குமாரையே சந்தித்தபோது அவர் ஒரு புதுமாப்பிள்ளையின் பூரிப்பில் இருந்தார்.

அவரிடம் அவரதுகால் பற்றிக் கதைத்தபோது;

1982ஆம் ஆண்டு 7ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும்போது எனது வலது கால் அகற்றப்பட்டது.

அதைத்தொடர்ந்து காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களால் எனக்கொரு மூன்றுசில்லு துவிச்சக்கர வண்டி அன்பளிப்பாகத் தரப்பட்டது.

அதன் உதவியால் எனது படிப்பை ஜீ.சி.ஈ. சாதாரணதரம் வரை மேற்கொண்டேன்.

எனக்கு மீண்டும் இப்படி கால் கிடைக்கும், நான் எவரின் உதவியுமின்றி நடமாடித் திரிவேன் என்று கனவிலும் எண்ணவில்லை.

எனக்குக் கால் இல்லை என்ற கவலையைவிட 5 பெண்களுக்கு ஓர் ஆண் பிள்ளையான எனது நிலையை எண்ணி எனது குடும்பத்தவர்கள் கவலைப்படுகிறார்களே என்ற கவலைதான் அதிகமாக இருந்தது.

அவர்களுக்கு எந்தவித உதவியும் செய்ய முடியாத கையாலாகாதவனாக அவர்களுக்கு ஒரு பாரமாக வாழ்நாள் முழுவதும் வாழவேண்டுமே என எண்ணி மனம் வருந்தினேன்.

இன்று என் வேலைகளை நானே கவனிக்க முடிகிறது.

பஸ்ஸில் தனியாக சென்று பண்டத்தரிப்பில் உள்ள கடிகாரக் கடை ஒன்றில் ஓய்வு நேரங்களில் வேலை பழகுகிறேன்,

சிலவாரங்களின் பின் என் முயற்சிகளாலும், நல்ல பயிற்சிகளாலும் சைக்கிள் ஓட்டமுடியும் என்று நம்புகிறேன்.

நடைபிணமாக இருந்த என்னை மீண்டும் நடமாடவைத்த நல்ல

**பேட்டி: எஸ்.யே.பி. ரட்ணதுரை**

வர்களுக்கு எனது நன்றி என்றும் உரியது.

விசேஷமாக என்னை கொழும்புக்கு தனது செலவிலேயே அழைத்துச் சென்று சகல உதவிகளையும் முன்நின்று செய்த அந்தோனிப்பிள்ளை ரீச்சருக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன்-இப்படி அவர் கூறினர்.

அவரைச் சந்தித்து மேலதிக விவரங்களை பெறும்படியும் கேட்டுக் கொண்டார் பரம்குமார்.

**அந்தோனிப்பிள்ளை**

பிச்சை போடுகையிலும் பிரதிபலனை எதிர்பார்க்கும் எம் சமூகத்தில் எவ்வித பிரதிபலனையும் எதிர்பகர்க்காது, விளம்பரத்தை விரும்பாது உதவி செய்த மாதகல் அன்னையர் முன்னணித் தலைவி திருமதி அந்தோனிப்பிள்ளையை சந்தித்தேன்.

அவர் ஜெய்ப்பூர் கால் பற்றி தெரிவித்ததாவது-

கொழும்பில் ''பிறன்ட் இன் நீட் சொஸையிற்றி'' செயற்கைக்கால் பயிற்சி நிலையமொன்றை நடத்தி வருகிறது.

அங்கே பலதரப்பட்ட கால்களை இழந்தவர்கள் கால்களை பொருத்திக் கொள்வதுடன், பயிற்சிகளையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

அவர்களுக்கு 'நோருட்' ஸ்தாபனம் நிதி உதவி செய்கிறது.

ஒரு முழு செயற்கைக் காலுக்கு 1000 ரூபாவும், அரைக்காலுக்கு 850 ரூபாவும் செலவாகிறது.

பயிற்சி நிலையத்தில் தொழில் புரியும் அனைவரும்: ஏற்கனவே கால் இழந்து செயற்கை கால் பொருத்திக் கொண்டவர்களே.

இதனால் அங்கவீனர்களின் கஷ்டங்களைப் புரிந்து கொண்டு அவர்களால் பயிற்சி அளிக்க முடிகிறது.

பரம்குமாருக்கு செயற்கைக்கால் பொருத்துவதற்காக 'நோருட்' ஸ்தாபனத்தின் தொடர்பை; திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கனேந்திரன் பெற்றுத் தந்திருந்தார்.

**'நோருட்' உதவி**

இப்போது கால் இழந்தவர்களது விண்ணப்பங்களை அன்னையர் முன்னணி பெற்று வருகிறது.

இவர்களுக்கு விரைவில் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் 'நோருட்' ஸ்தாபனத்தின் உதவியுடன் பொருத்தப்படவுள்ளது.

மேலும் யாழ்ப்பாணத்தில் ஒரு ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தும், பயிற்சி நிலையமொன்றை 'நோருட்' உதவியுடன் நிறுவ அன்னையர் முன்னணி முயற்சி எடுத்து வருகிறது.

முயற்சி பலனளிக்கும் பட்சத்தில், ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தப்பட்ட முதல் யாழ்பாணத் தமிழ் இளைஞன பரம்குமார் முதல் பயிற்சியாளராக அங்கே கடமை புரிவார்.

—இப்படி திருமதி அந்தோனிப்பிள்ளை கூறினர்.

அவரது கனவு நனவாகி; நடைப்பிணமான பலரை நடமாட வைக்கும் நல்லவர்களுக்கு யாழ்ப்பாணம் என்றும் நன்றிக் கடன் பட்டிருக்கும்.

# ஆயுதங்களை போடும் பேச்சுக்கே இடமில்லை

## ஈ.பி.ஆர்.எல்.எப். அறிக்கை

சென்னை, அக். 17

பேச்சுக்களில் கலந்து கொள்ளும் முன்னரோ, அல்லது சமாதான யோசனைகளை அமுல் நடத்தும் முன்னரோ ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிச் செயலாளர் நாயகம் கே. பத்மநாபா சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரச்சினைக்கான ஆணிவேர் பிடுங்கப்படும்வரை எமது ஆயுதப் போராட்டம் தொடரும்.

ஆயுதம் ஏந்தியதற்கான காரணங்கள் நிலவும்வரை ஆயுதப்போராட்டத்தைக் கைவிடமுடியாது.

சர்வதேச, அரச பயங்கரவாத, அடக்குமுறைக்கு எதிரான எமது ஆயுதப் போராட்டம் நீதியானதும் சட்டபூர்வமானதும் ஆகும். அரச பயங்கரவாதத்துக்கு நாம் அடிபணியப்போவது இல்லை.

எமது மக்கள் சமாதானத்தைத்தான் விரும்புகிறார்கள்; ஆனால் அடிமைகள் விரும்பும் சமாதானத்தை அல்ல. தற்போதைய சமாதான யோசனைகள் எமது சம்மதத்தைப் பெறவில்லை.

பேச்சுக்கள் மூலம் அமைதித் தீர்வைக்காண இந்திய அரசு எடுத்து வரும் முயற்சிகளை பாழடிக்கச்செய்யும் விதத்திலும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது செல்வாக்கை நிலைநாட்டும் விதத்திலும் அமெரிக்கா ஈடுபட்டு வருவது கண்டிக்கத்தக்கது.

இப்படி திரு. பத்மநாபா தனது அறிக்கையில் தெரிவித்தார்.

(இ-ஐ-எ)

### உருக்கமான வேண்டுகோள்

திருகோணமலை கூனித்தீவைச் சேர்ந்த விஜயகமூர்த்தி கோணேஸ்வரன் என்ற பெயரைக் கொண்ட தேசிய அடையாள அட்டையும் மூதூருக்கான விசேட அடையாள அட்டையும் பேர்சுடன் யாழ் மாநகர சபை எல்லைக்குள் தொலைந்துவிட்டது. பிரயாணம் மேற்கொள்ள இருப்பதால் எடுத்தவர்கள் கீழ்காணும் முகவரிக்கு ஒப்படைத்து உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

வி. கோணேஸ்வரன், முகவரி, 111 A, கலைவாணி ஜுவலர்ஸ், கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 34, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

# சுதந்திரம் கிடைக்கும் வரை ஆயுதப் போர்

## புலி இயக்கப் பேச்சாளர் கருத்து

சென்னை, அக்.17

தமிழ் மக்களுக்கு அமைதியும் பாதுகாப்பும் வழங்கவே போராளிகள் ஆயுதங்களை ஏந்தியுள்ளனர். தமிழரின் சுதந்திரம் கிடைக்கும் வரை, ஆயுதப் போராட்டம் தொடரும்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சாளர் சென்னையில் தெரிவித்தார்.

பிராந்திய சுயாட்சித் தீர்வை அமுல் நடத்தும் முன்னர் போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்ற நிபந்தனையை ஜனாதிபதி ஜெயவர்த்தன விதித்திருப்பதாக வந்த செய்திகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையிலேயே புலிகள் பேச்சாளர் மேற்கண்ட கருத்தை வலியுறுத்தினர்.

ஜனாதிபதியின் முன் நிபந்தனையை ஏற்று நாம் ஆயுதங்களைக் கீழே போடமாட்டோம்.

அமெரிக்கா இதுவரை மறைமுக ஆதரவுதான் இலங்கை அரசுக்கு வழங்கி வந்தது. போராளிகளை எதிர்த்துப் போராட இப்போது இலங்கை அரசுக்கு பகிரங்கமாக உதவ முன்வந்துள்ளது.

எமது போராட்டம் விரிவானது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரானது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள 'பந்த' நாடு ஒன்றுக்கு உதவி அளிக்க அமெரிக்கா முன்வந்தது இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு விடுக்கப்படும் பயமுறுத்தலாகும்.

ஜனாதிபதியின் 'சூடு - குளிர்' பேச்சுக்கள் இந்திய அரசுக்கும் தமிழர் அமைப்புக்களுக்கும் இடையே பிளவை உண்டாக்கும் நோக்கில் அமைந்துள்ளனவே ஒழிய, தீர்வுகாணும் உண்மை விருப்பினால் அல்ல.

இப்படி புலிகள் பேச்சாளர் சொன்னர்.

(இ-ஐ-எ)

# அரசாங்க அலுவலகங்களில்.... சிகதி

## வடக்கே வருவோ நக்கு இப்படி ஒரு தண்டனையா?

வடக்கே கடமை புரியும் அரச பணியாளர்கள் சிலருக்கு, இடமாற்றம் பெற்று ஒரு வருடம் பூர்த்தியாவதற்கு முன்னர், காலம் கடந்த பதவி உயர்வுகளை வழங்கி அரசு அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்துள்ளது. இவர்களில் சிலர் வெளி இடங்களில் பல ஆண்டுகள் கடமை புரிந்தவர்கள் என்பதை இடமாற்றம் செய்த அதிகாரிகள் அறியாது இருப்பது வியப்புக்குரியதாகும். இதுவும் ஒருவித தண்டனையா?

* *

எந்தத் திணைக்களத்திலும் ஒரு ஒழுங்கு நடைமுறை உண்டு. அது காரியங்கள் துரிதமாக நடப்பதற்கு உதவியாக இருக்கும். ஆனால் சில அதிகாரிகள் தங்களுக்கு ஏற்றமாதிரி நடைமுறைகளை உண்டாக்குகின்றனர். பணியாளர்கள் இதனால் சிரமத்திற்குள்ளாகின்றனர். கடமையும் பாதிக்கப்படுகிறது. இப்படியான அதிகாரிகள் தங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற முனைப்பினால் இக்கெடுபிடி உண்டாகிறது. இதற்குப் போதிய அனுபவமின்மையே காரணம்.

* *

சட்டத்தை நிலைநாட்டுபவர்களே தென் இலங்கை மாவட்டங்களில் தங்கள் சொந்த வாகனங்களுக்கு வருடாந்த அனுமதிப்பத்திரம் எடுப்பதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பொலீஸ்மா அதிபரினால் அனுப்பப்பட்ட சுற்றுநிருபத்தில் கடந்த காலத்திற்குரிய அனுமதிப்பத்திரங்களை எடுக்கும்படியும் வாகனங்களின் இலக்கத்தை தெளிவாகப் பதிப்பிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளனர். சட்டத்தை அமுல் செய்பவர்களின் நடத்தை எப்படி? ''உனக்கில்லையடி கண்ணே, ஊருக்குத்தான் உபதேசம்'' என்ற நிலை.

* *

சமர்ப்பிக்கப்பட இருக்கும் வரவு-செலவுத்திட்டத்தில் இம்முறை கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணம் குறைக்கப்பட்டுப் பாதுகாப்புச் சேவைக்கு அதிகரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அப்படியானல் கல்வி பயில்வோர் நிலைபெரிதும் பாதிக்கப்படுவது உறுதி. இதனைக் கல்விமான்களும், அறிஞர்களும் கவனத்தில் கொண்டு உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். தரப்படுத்தலால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இதுவும் மேலதிகமான தாக்கத்தை வேறுவழிகளால் ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

* *

அரச அதிகாரிகள் பதவிக்கு, அரசாங்கம் சில சமயங்களில் அரசியல் தொடர்புள்ளவர்களையும் அரச சேவையில் இல்லாதவர்களையும் நியமிக்கிறது. இதனால் அரசு தனது கொள்கைகளை நிலைப்படுத்த முடியும் எனவும் இந்த அதிகாரிகள் தன்னை எக்காலகட்டத்திலும் கைவிடமாட்டாது எனவும் நம்புகின்றது. ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டு பல கட்சிகள் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட இன்றைய அரசு கட்சித் தொடர்புள்ளவர்களைப் பதவிகளுக்கு நியமிப்பதால் திறமையின்மையை உருவாக்கவும் கட்சி அரசியலை வளர்க்கவுமே உதவுகிறது. அரச சேவை இதனால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றது. இது பற்றி யாருக்குக் கவலை


## பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி

● குவைத் ● இங்கிலாந்து

● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும் விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்குச் செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் 25 – 10 – 86 ஆம் திகதி நேரடியாக அழைத்துச் செல்வார்.

குவைத்துக்கு Airport Cleaners (ஏயார் போட் கிளீனேர்ஸ்) ஆக செல்ல விரும்புபவர்கள் 24-10-86 ஆம் திகதிக்கு முன்பாக பாஸ்போட், 6 படங்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

பஸ் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,

* உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.

* குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

## GLORIA TRAVELS

● கனடா ● டென்மார்க்

● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

டென்மார்க், கனடா செல்வதற்கு

உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND),
விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்

வெளிவந்துவிட்டது!

G C.E, A/L மாணவர்களுக்குரிய
இலங்கைப் பொருளாதாரம்

## 'அரசநிதி'

விலை ரூபா 15/-

ஆசிரியர்:
மா. சின்னத்தம்பி (B.A. B.Phill)

வெளியீடு:
பட்டப் படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்


## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விபரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கை வங்கியின் 16 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 40. 08 |
| அமெ. டாலர் | 28. 13 |
| இந்திய ரூபா | 2. 25 |
| மார்க் ஜேர்மனி | 14. 10 |
| கனடா டாலர் | 20. 08 |
| பிராங் (பிரான்சு) | 4. 25 |
| பிராங் (சுவிஸ்) | 17. 23 |
| அவுஸ் டாலர் | 17. 79 |


திருநெல்வேலி அரசடி
## ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் தேவஸ்தானம்
# மகா அபிஷேகம்

நாளை 1986 10-19 ஞாயிற்றுக்கிழமை

காலை 8 – 10 மணி வரை:
அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம்
மகாமேரு யந்திரத்திற்கு 1008 சங்காபிஷேகம்

பரிவார மூர்த்திகட்கும் எழுந்தருளி மூர்த்திகட்கும் 18 ஸ்நபன அபிஷேகம் 7 உருத்திர அபிஷேகம் ஏககாலத்தில் நிகழும்.

10 – 11 மணி: 21 சிவாச்சாரியார்களால் ஸ்ரீ மகாமேரு யந்திர விசேஷ பூசை நடாத்தப்படும்.

11 – 12 மணி: 21 சிவாச்சாரியார்களால் அம்பாளுக்கு அர்ச்சனை நடைபெறும்.

அடியார்கள் அம்பாளைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெறும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

அம்பாள் அநுக்கிரகம் அனைவர்க்கும் உரித்தாகப் பிரார்த்திக்கிறோம்.

## அம்பாள் ஸ்ரோர்ஸ்
பலசரக்கு மொத்த-சில்லறை வியாபாரம்
திருநெல்வேலி சந்தி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் அகங்காரத்தை ஒழிப்பானுல் அவனுக்கு சுவர்க்கம் கிடைப்பது நிச்சயம். இந்த உலகத்திலேயே மனிதன் சுவர்க்கத்தை அடையலாம். ஆனுல் மனிதன் எங்கேயோ சுவர்க்கத்தை நாடுகின்ருன்.

இயற்கையாக மனிதன் தெய்வத்தன்மை படைத்தவன்

முகில்கள் ஆகாயத்தில் தோன்றி மழையாகப் பூமியை வந்து அடைகிறது. பூமியை வந்து அடைந்தாலும் அதன் தூய்மையை இழப்பதில்லை. சமுத்திரத்திலுள்ள உப்பும் தனது சுயரூபத்தை என்றும் இழப்பதில்லை அதேபோல மனிதனின் வாழ்க்கையும், வாழ்க்கையின் குறிக்கோளும் கடவுளை விட்டுப் பிரியாமல் இருப்பதேயாகும் மனிதன் கடவுளை அடைய எண்ணுவது இயற்கைச் சுபாவம்.

மனிதன் தனது சுயரூபத்தை இழப்பதற்கு மூலகாரணம் மோகம் அல்லது ஆசை. மோகத்தினுல் ராகம். ராகத்தினுல் குரோதம். குரோதத்தினல் அறியாமை அஞ்ஞானம் இவற்றைத் தொடர்ந்து துவைதபாதம், கர்மம், ஜன்மம், துக்கம் இவை சங்கிலி போல் மனிதனைப் பிணைக்கின்றது. பிறவிதோறும் தொடர்ந்து வருகின்றது.

பல நாமங்களையுடைய அர்ஜுனன் இறுதியில் மோகத்தினுல் அல்லலுற்

# மதிவழி உத்தமம்
# மனம் வழி அதமம்

ருன். மோகம் ஒரு மனிதனை தன்பிடிக்குள் நன்ருகச் சிக்க வைத்துவிடும். ஒருவன் மனத்தைத் திடப்படுத்தி ஒரு காரியம் செய்யலாம் எனினும் மனத்தை அடக்குவது அசாத்தியம். பகவத்கீதையில் மனத்தின் அமைதியற்ற நிலை குறிப்பிடப்படுகிறது. தூய்மையான மனத்தின்கண் ஆசை கிடையாது. தெய்வீகம் திகழும். மனந்தான் ஒருவனை அடிமைப்படுத்தவோ சுதந்திரம் உள்ளவனுக்கவோ காரணமாயுள்ளது. ஒரு விஞடி தானும் மனம் ஓரிடத்தில் இருக்காது. அப்படியானுல் மனத்தை எங்ஙனம் அடக்குவது?

மனம் ஐம்புலன்களின் தலைவன் ஒரு தலைவன் தனக்குக் கீழ் உள்ளவர்களை அடக்கி ஆள்வது தான் முறை அதற்குப் பதிலாக வேலையாட்கள் எஜமானரை அடக்குவது போல அநேகருடைய மனம் ஐம்புலன்களுக்கு அடிமையாக இருக்கின்றது இராமாயணத்தில் கைகேயி மந்தரைக்கு அடிமைப்பட்டாள். கைகேயி இராசகுடும்பத்தைச் சேர்ந்தவள் தசரதரின் பிரிய மனைவி. பர

தனின் தாய் ராமனை மிகவும் நேசித்தாள் மந்தரையின் புத்தியைக் கேட்ட காரணத்தினுல் கணவனை இழந்தாள். பரதனுக்கும் மாசு ஏற்படுகிறது. யாவரும் பார்த்து ஏளனம் பண்ணும் விதத்தில் அவளுடைய செய்கை இருந்தது. கைகேயி மந்தரைக்கு அடிமைப்பட்டதுபோல் நாம் ஐம்புலன்களுக்கு அடிமைப்பட்டால் நமக்கு அப



கீர்த்தி உண்டாகும்

மனத்தை நல்ல நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் ஆகாயத்தில் முகில்கள் தோன்றும். பின்பு காற்று அவைகளை மறையச் செய்யும். அதே விதமாக மனதிலுள்ள ஆசைகளை நீக்க வேண்டும். தேகாபி

மானம் குறைய வேண்டும். சாதாரணமாக ஒவ்வொருவரும் தங்கள் தேகத்தில் அபிமானம் கொண்டுள்ளார்கள் சாதனை மூலம் தேகாபிமானத்தை நீக்க வேண்டும்

அவதார தத்துவத்தை ஸ்ரீ சத்ய சாயி பாபா கீழ்காணும் உதாரணம் மூலம் விளக்கினுர் ஒரு கிராமபோன் பாட்டுத் தட்டில் எல்லா வரிகளும் சேர்க்கும்போது ஒன்ருகத் தெரியும் ஆனுல் ஒவ்வொரு வரியிலும் வேறுபட்ட ஒவ்வொரு இசை உள்ளது அதேபோல் மனிதனும் அவதார புருஷரும் உருவத்தில் ஒன்ருகத் தோன்றினுலும் அவர்கள் செயலிலும் எண்ணத்திலும் மாறுபட்டவர்கள்.

அவதார தத்துவம் பூரணமான ஒரு தத்துவம்.

மனிதன் பல பிறவிகள் எடுக்கின்ருன் ஆசைகள் அவனைத் தொடருகின்றன அவனும் இறைவனை நாடி உண்மையான சாதனை புரிவதில்லை தனது பல பிறவிகள் தோறும் எழுந்த வாசனைக்கு அடிமையாகின்ருன்.

சாஸ்திரங்களில் மிக

உயர்ந்த இடத்தைப் பெறுவது ஸ்ரீமத்பகவத்கீதை, கீதையின் பிரகாரம் மனிதனுப் பிறப்பது மேலானது. கடவுளை அடைய நாட்டம் உள்ளவனும் மேலானவன், தெய்வசாந்நித்தியத்தை, கிருபையை பெற்றவனும் மேலானவன் ஆவான்

மனத்தைக் கடவுள்பால் செலுத்தித்தான் கட்டுப்படுத்தலாம் மனத்தை ஒரு கடுமையான வண்டிற்கு ஒப்பிடுகிருர்கள் இறைவனின் தாமரைமலர் போன்ற திருவடிகளை மனமானது அடைந்துவிட்டால் மனம் வெளியே வரமுடியாது. இறைவன் திருவடியை அடையாவிட்டால் அது அங்குமிங்கும் அலையும் அதைக் கட்டுப்படுத்த முடியாது

மனத்தின் தன்மை எப்போதும் வெளியே செல்லும் தன்மையுடையது மனம் போகும் வழியில் மனிதன் சென்ருல் அவ

சன் மாளிகைக்குத் திரும்பிவிட்டது. அரசனுக்கு இது தெரியாது அதே பசுவை வேருெரு பிராமணனுக்கு தானம் செய்து கொடுத்தான். அவன் பசுவைக்கொண்டு செல்லும் வழியில் முதல் பிராமணன் அது தன்னுடைய பசு என்று வாதாடினுன். அரசன் முன்னிலையில் அவர்கள் இருவரும் வழக்கை உரைத்தனர். இரண்டாவது பிராமணனிடமிருந்து அரசன் கொடுத்த பசுவை வாங்க முடியவில்லை. அரசன் பகுத்தறியாமல் ஒரு பசுவை இரண்டு பிராமணருக்கு தானம் செய்துவிட்டதால் பாவமடைந்தான். சித்த சுத்தியே கர்மம் மனத்தூய்மையும் பக்தியும் ஞானமும் அவசியம் கீதை நிஷ்காமிய கர்மத்தை சிறப்பாக விளக்குகிறது. இறைவனிடம் பிரேமை கொள்வதே உயர்ந்தது. பிரேமை ஒருவழிப்

மூலம்: பகவான் சத்யசாயிபாபா.

தமிழ் வடிவம்: சுவாமி சித்ரூபானந்தா

னுக்கு மிருகத்தின் சுபாவம் ஏற்படும் உன்னத புருஷர்கள் புத்தியின் வழி செயல்படுவார்கள். அவதார புருஷர்கள் இதை வலியுறுத்துகிருர்கள் இதை விளக்க பகவான் பிரம்மசூத்திரத்திலுள்ள ஒரு கதையை விவரித்தார் ஓர் அரசன் ஒரு பிராமணனுக்கு ஒரு பசுவைக் கொடுத்தான் அப் பிராமணன் அப் பசுவை தன் வீட்டில் கட்டிவைத்தான் இரவோடிரவாக பசு அர

பாதையாகும். பூர்ண அவதாரம் பிரேமையை நிலைநாட்டுகின்றது சாதனை மிக மிக முக்கியம் மனிதருடைய நிஜ சொரூபம் எவரையும் நிந்திக்காமல் இருத்தல். தெய்வத்திடம் உண்மையான பிரேமை ஏற்பட்டதும் நாம் தெய்வத்திடம் ஒன்றையும் கேட்க மாட்டோம்.

ராம அவதாரத்தில் சுக்கிரீவன், ஜாம்பவான் என்போர் தந்தும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கடல் கடந்த கடிதம்

### சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள்!

தம்பி,

கருத்தரங்குகள் பற்றிய கடிதம் கிடைத்தது: ஆய்வு நிறுவனம் நடத்திய கருத்தரங்குகள் பற்றி அறிய வாய்ப்பு ஏற்பட்டது!

நமது மாநிலத்தின் வளங்கள்—கைத்தொழில், விவசாய வளர்ச்சி ஆகியனபற்றி ஆய்வாளர்களின் ஆக்கபூர்வமான கருத்துக்கள் வெளியாயின; சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள்! பாராட்டப்படவேண்டிய முயற்சி!

கொழும்பிலுள்ள இலங்கை விஞ்ஞான கைத்தொழில் நிறுவனம் (C S I R), கைத்தொழில் வளர்ச்சிச் சபை (I.D.B) மார்கா நிறுவனம் (Marga) போன்றவை எமக்குப் பூரணமாகத் தொடர்ந்தும் உதவுமோ என்னவோ? அவர்களின் ஆய்வுகள் கூடுதலாக அந்தப்பக்க வளங்கள்—வளர்ச்சி பற்றியவையே!

எமக்கென்று தனியான—நிரந்தரமான—ஆராய்ச்சி நிறுவனங்கள் நிறுவவேண்டிய காலம் வந்துவிட்டது!

புள்ளிவிவரங்களைச் சேகரித்தல்—தரவுகளைத் தொகுத்தல் வகைப்படுத்தல்—அறிக்கைகளைத் தயாரித்தல்—ஆலோசனை வழங்கல் போன்ற பல வேலைகள் அறிஞர்க்குண்டு- நிரந்தர நிறுவனங்களுக்குண்டு! நல்லூர் பொருத்தமான தொழிற்நுட்ப சேவைகள் இதற்கு முன்னேடியாக விளங்குகின்றது எனக் கேள்விப்பட்டேன்!

நூலக வசதி—களத்தில் இறங்கி ஆய்வுகள் நடத்த மனிதவள வசதி போன்ற பல வசதிகளைக் கொண்ட பல்கலைக்கழகம் பயனுள்ள பணிகள் செய்கின்றது! பாராட்டுகிருேம்! ஆனுல் இன்னும் நெருக்கமாக மக்கள் மன்றத்திற்கு வரவேண்டும் — காலத்திற்கேற்ற ஆய்வுகள் வேண்டும்! ஆராய்ச்சி நிறுவனங்களுக்குப் பக்கபலமாகவேண்டும்!

சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள்! தம்பி சிந்தனைகள் செயலுருப் பெறுமா?

அன்புடன்
—சிவா—

# சிறைக்கூடங்களில் சித்திரவதைகள்;
# மறைக்கப்பட்டுவரும் பல அக்கிரமங்கள்

ஸ்ரீலங்கா அரசின் சிறைக் கூடங்களிலும், தடுப்பு முகாம்களிலும் சித்திரவதைக்குள்ளாகி வரும் தமிழ் இளைஞர்களின் கதை பரிதாபத்திற்குரியது

அன்று குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை போன்ருேர் தமது சிறைவாழ்க்கை குறித்து நீதிமன்றத்தில் கூறியதும்—

இன்று சிறையில் இருந்து ஏதேனும் ஒரு வாய்ப்பால் வெளியேறும் எமது தமிழ் இளைஞர்கள் கூறும் அனுபவங்களும் ஒன்ருகத்தான் இருக்கின்றன

தமிழ்க் கைதிகளை நிரந்தர நோயாளிகளாகவும் மனநோயாளிகளாகவும் மாற்றும் சித்திரவதைக் கூடங்களிலே அடைபட்டு இருவருடங்கள் கொடுந் துன்பத்தை அனுபவித்தபின் நீதிமன்றத்தில் நிரபராதியாக விடுவிக்கப்பட்ட ஒரு தமிழ் இளைஞனின் சிலிர்ப்பூட்டும் அனுபவம் இது.

இக்கட்டுரையில் வரும் பெயர் விவரங்கள் இடு பெயர்களாகும்.

பெற்ற தமிழ்ப் பெண்ணை - வளர்த்த தமிழ் மண்ணை - விட்டு விண்ணிற்குச் செல்ல 'விசா' தரும் சிறைச்சாலையின் விசாரணைக்கூடம்.

அங்கே அந்த இளைஞன், 'செல்வம்', சேவிக்குறி போல் சுருண்டு கிடப்பதை; வேள்விக் கிடாயை வேடிக்கை பார்ப்பது போல் கேளிக்கையில் மகிழும் இராணுவத்தினர்.

விட்டில் பூச்சியாய் விடுதலை விளக்கில் விரும்பியே விழுந்த அந்த இளைஞன் போராளி என இராணுவத்தால் இனம் காணபபட்டவன்.

### சூட்டுக் கோலால் உடம்பில் குறி

அவனது உடலெங்கும் காயம் எதுவும் காணப்படவில்லை இரத்தத்தில் தோய்ந்து அவை மறைக்கப்பட்டுவிட்டன.

இரத்தத்தில் தோய்ந்த துணிக்குவியலாய் அவன் காணப்படுகிருன்

அவனது ஒரு காலில் கயிறு கட்டப்பட்டு கூரையில் மாட்டப்பட்டு அவன் உடல் உயரே தூக்கப்படுகிறது

புரட்சிக்கொடி ஏற்றப் படுவது போல் அவனது சிவந்த உடல் மேல் எழும்புகிறது.

மக்களை மாக்களாக மதிக்கும் சிப்பாய்களில் ஒருவரின் கையில் சூடேற்றிய இரும்புக் கோல்

அதன் நுனியின் சிவப்பைப் போலவே சிவந்து கிடக்கிறது மேஜரின் கண்களும்.

அவர் ஒரு சிப்பாயைக் கண்களால் நோக்கி இமைகளால் ஒப்புதலளிக்கிருர்.

அவன் ஒற்றைக்காலில் கயிற்றிலே தூங்கும் இளைஞனின் மற்றக் காலைப் பிடித்து இழுக்கிருன்.

சூட்டுக் கோலை வைத்திருந்தவன் மாட்டு குக்குறிவைப்பதுபோல் இளைஞனின் உடலெங்கும் குறி வைக்கிருன்.

இளைஞன் அலறவில்லை; கதறவில்லை உடலை விட்டு உயிர் பிரிவதற்குப் பிசியப்பட்டவன் போல் காணப்படுகிருன்.

இப்போது சூட்டுக் கோல் அவனது மலவாசல் மூலமாக செலுத்தப்படுகிறது

அவனது அலறல் சிறைச்சாலையையே அதிர வைக்கிறது.

அவனை தென்னங் கீற்றைத் தெருவில் இழுப்பது போல் இழுத்துவந்து சிறையிலே தள்ளுகிருர்கள்.

அவன் இருவாரங்க

எனத் தீர்ப்பாகி விடுதலையாகியிருந்த அவரை சிறை அனுபவங்களைக் கேட்டறிவதற்காகப் பேட்டி கண்ட போதே அவர் இவ்வாறு கூறினுர்.

கர்ப்பம் அடைந்ததை வயிற்றுக்குமுன் வாந்தி காட்டிக் கொடுப்பதைப் போல்; சிறையில் அவர் பட்ட சித்திரவதைகளை அவரது வார்த்தை

## வெஞ்சிறையில் வெந்த இளந்தமிழன் அனுபவம்

ளாக எந்தவித இயற்கைக் கடனையும் கழிக்க முடியாத நிலையில், காயங்களுக்கு மருந்து ஏதும் இன்றி எம் கண் முன்னே அணு அணுவாக இறந்தான்.

இவ்வாறு தம்மோடு சிறையிலிருந்த இளைஞனின் கதையைக் கூறினுர் வலிகாமம் வடக்கிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த ஒரு இளைஞர் நாயகம்.

### சிறை அனுபவம்

அண்மையில் நிரபராதி

களுக்கு முன் உடல் காட்டிக் கொடுக்கிறது

முன்னர் சிறந்த விளையாட்டுவீரரான அவரது திடகாத்திரமான உடம்பு இன்று நேர்கோடுபோல் மெலிந்து எண்ணெய் வற்றி எரியும் திரியாய் ஊசலாடுகிறது

அவர் இருந்த சிறையறையின் கதவுக் கம்பிகளைப்போல் எக்ஸ்ரே எடுக்காமலேயே எலும்புகள் தெரிகின்றன

நித்திரை இன்றி சித்திரவதைப்பட்டு இரவி

லும் இறக்க மறந்த இமைகளால் பார்வையில் கூர்மையிழந்த கண்கள்

அனுபவங்களைச் சிந்தித்துத் தொகுத்துக்கூற முடியாதளவுக்கு சிறை அவரை நிரந்தரநோயாளியாக்கிவிட்டது அவரது உதடுகளிலிருந்து உதிரிகளாக உதிர்ந்தவற்றை உங்களுக்குத் தொகுத்துத் தருகிருேம்.

### தள்ளாடி முகாமில்

1984 ஆம் ஆண்டு பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தள்ளாடி முகாமிலே சிறைவைக்கப்பட்டேன்.

அங்கே; போராளிகள் பற்றிய தகவல்களைத் தருமாறு எம்மைச் சித்திரவதை செய்தார்கள்.

தூணை நாம் கட்டிப் பிடித்திருக்க; மண் நிரம்பிய எக்லோன் குழாயால் பின் பக்கத்தில் தாக்குவார்கள்.

நகங்களில் ஊசிகள் ஏற்றுவார்கள்.

தலைகீழாகக் கட்டித் தூக்கிவிட்டு, முகத்துக்குள் மிளகாய் நெருப்புப் புகையை மயங்கும் வரை காட்டுவார்கள்.

கைகால்களைக் கட்டி வாசலிலே போடுவார்கள்—அவ்வழியே செல்வோர் எம்மைப் 'புட்போல்' விளையாடுவதற்காக

தாகத்துக்குத் தண்ணீர் கேட்டால் ஒரு பெரிய கிளாஸ் நிறைய தண்ணீர் கொண்டு வருவார்கள்; ஆனுல் ஒரு சொட்டுத் தண்ணீரே எமது வாயில் விடுவார்கள்

கால் இருத்தல் பாண் தான் ஒருநேர உணவு

படுக்கவிடாமல் இரவு பகலாகச் சித்திரவதை செய்தார்கள்.

அடிப்பாதம் வீங்கும் வரை அடிப்பார்கள் இதனுல் இன்னும் பலர் நரம்

### பேட்டி: ரட்ணு

புத்தளர்ச்சிக்குள்ளாகி நடக்கமுடியாதுள்ளனர்.

### வவுனியாவில்

இருவாரகாலம் தள்ளாடியில் சித்திரவதைப்பட்டபின் வவுனியா முப்படை முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டேன்.

அங்கே தான் வாக்கு மூலம் என்ற பெயரில் ஓர் ஆவணம் பெறப்பட்டது

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வாக்குமூலமே முக்கிய சாட்சியமாகக் கருதப்படுகிறது

இதனுல் எம்மை இம்சைப்படுத்தி வாக்குமூலம் என்ற பெயரில் தமக்கு விரும்பியதை எழுதிப் பெற்றுக் கொண்டார்கள்.

வவுனியாவில் இருவாரங்களுக்கு இருட்டறையிலே அடைத்து வைக்கப்பட்டேன்.

இரு நிமிடங்கள் உணவுக்காகத் திறந்து விடுவார்கள். இயற்கைக் கடன்கூட உள்ளேயே கழிக்க வேண்டும்.

ஒரு மாதமாக அங்கே குளிக்கவில்லை.

8 அடி நீள, அகலமுள்ள அறையில் 50 பேரை மந்தைகள்போல அடைத்து வைத்தார்கள்.

நிற்கவே இடமில்லாததால் படுப்பதைப்பற்றி நினைக்கவே முடியாது.

சொறி, சிரங்கு போன்ற தொற்று நோய்கள் ஏற்பட்டாலும் மருந்து ஏதும் கிடையாது

வெளியே இராணுவத்தினரைப் போராளிகள் தாக்கினுல் உள்ளே எம்மை மூர்க்கமாகத்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# மூண்ட போர் தொடர்கின்றது
# மாண்ட பேர் பெருகுகின்றனர்

பைந்தமிழ் மண்ணைப் பகற்கொள்ளையடித்து செந்தமிழ் இனத்தை அடிமைகொள்ள நினைத்த தருக்கர் கூட்டமாம் பறங்கிப் படைக்கும்—

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோமென மார்தட்டி தோள்தட்டி கிளர்தெழுந்த தமிழ்ப் பெருஞ் சேனைக்கும்—

மூண்டபோர் தொடர்கிறது... மாண்டபேர் தொகை பெருக ஏழு நாள் நீண்ட போர் தமிழரைச் சீண்டவந்த பறங்கியர்க்கு மிகையான உயிர்ச்சேதம் உண்டுபண்ணி விடுகிறது.

போர்க்களத்தில் வாளேந்திப் போராடி நிற்கும் பறங்கியர் தன்னம்பிக்கை தளர்ந்து வாடிச்சோர்ந்து களைத்துப்போய்க் கொண்டிருந்தவேளை... கட்டிளம் காளையாய் தமிழ்ச்சேனை, சூறாவளிபோல் சுழற்றி நிற்கிறது தன் கூர் வாளை... இவ்வேளை... எதிர்பாராத விதமாக மின்னலிடி முழக்கம் போல் புதிரான வெடியோசை கேட்கவே ஒரு கணம் திகைத்து நின்ற

தமிழ்ச்சேனை சேனாதிபதியின் திடீர் உத்தரவையடுத்து மறுகணம் சடுதியாய்ப் பதுங்கியொதுங்கி சாதுர்யமாக தூரத்தே சென்று நிலை கொள்கிறது

சளைக்காமல் போராடிய தமிழ்ச் சேனைக்கு இது களைப்பாறும் வாய்ப்பாக அமைந்துகொண்டது.

நல்லூர்ச்சேனை தொலைவில் நகர்ந்து நிலை கொண்டிருந்ததால் பறங்கியரின் துப்பாக்கி வேட்டுக்கள் வெற்று வேட்டாகின்றன சேதாரம் வெடிமருந்துக்குத்

துணுக்குற்று, திடீர் திடீரென படார் படாரென வெடிகளைத் தீர்த்தனர். அத்தனையும் சத்தவெடி தானெனினும் அது கேட்டு நல்லூர்ச்சேனை சித்தம் கலங்கி யுத்தம்

பகை வெல்ல வகை சொல்லி நின்ற நல்லூர்ச் சேனை பற்றி பிந்தி வந்த பறங்கியர் முந்தி அறியாததில் வியப்பில்லைத் தான்.

ஆயினும் தம்மிட

கீழைத்தேச நாடுகளைக் கடலாரம் செய்தும் திருவிளையாடல் புரிந்து வந்தனர் துப்பாக்கியின் துணையுடன் அவர்கள் கண்ட களமெல்லாம் வெற்றி! சென்ற நாடெல்லாம் வெற்றி! இடமெல்லாம் வெற்றி!! பெரும் வெற்றி!! ஆனுல் யாழ்ப்பாண இராச்சியத்தைப் பொறுத்த வரையில்.........

'துப்பாக்கியே துணை' யென்ற பறங்கிப்

பறங்கியருக்கு இது வோர் ஆதிக்கப் போர் ஆனுல் நல்லூர்ச் சேனைக்கு இது ஜீவ மரணப் போர்! நாடா? காடா? என்ற வினவுக்கு விடைபகர வேண்டிய போர்! வாழ்வா? வீழ்வா? என்ற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய போர்! விடிவா? முடிவா? என்பதற்கு மறுமொழி இறுக்கவேண்டிய போர்! யாழ்ப்பாண இராச்சியத்தின் விதியை நிர்ணயிக்கும் போர்! தீந்தமிழ் இனத்தின் கதியை தீர்மானிக்கும் போர்! இறுதிப் போர்!!

அதனுல் உறுதி கொண்டு அறுதியாகப் பகை வெல்லச் சாத்திருக்கிறது நல்லூர்ப் படை! 'சுற்றி நில்லாதே போ பகையே துள்ளி வருகுது வேல்' என வேல்

## சங்கிலி மன்னனின் உதட்டில் வீரப் புன்னகை

தானே தவிர நல்லூர்ப் படைக்கல்ல!

தரங்கம்பாடியிலிருந்து வந்து போர்க்களம் புகுந்து வெடிமுழக்கம் செய்த பறங்கிப் படையின் வெடி தீர்ந்த துப்பாக்கிகள் புகை புகையாய்க்கொட்டாவி விடுகின்றன!

செருக்களம் சேர்ந்த புதிய பறங்கிப் படை அங்கே தம் சகாக்கள் நல்லூர்ச் சேனையிடம் சிங்கத்தின் வாயில் அகப்பட்ட இரைபோல் சிக்கித்தவிப்பதைக் கண்டு

திறுத்தி சரணடையலாமென்று பிடிதம் தலைக்கேறிய வெள்ளைப் பறங்கியர் எண்ணினர்.

இவ்வெடிமுழக்கமெல்லாம் நல்லூர்ச்சேனைக்குப் பழைய கஞ்சி என்பது புதிய முஞ்சி பறங்கிகளுக்குத் தெரியாமல் போனதில் வியப்பில்லைத் தான். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது போல் துப்பாக்கிகளுக்கு முன்னுல் கல்லையும் வில்லையும் ஏந்தி, புத்தியையும் தீட்டி புதிய உத்தியையும் கையாண்டு,

மிருந்த புதுவகை ஆயுதமான துப்பாக்கியில் பறங்கியர் அசையா நம்பிக்கை வைத்திருந்தனர். அதுவே அவர்களின் சர்வரோக நிவாரணி!

### ம. க. அ. அந்தனிசில்

அதுவே அவர்களின் வெற்றித் தேவதை. அத்துப்பாக்கி ஆயுதம் ... இந்து சமுத்திரத்தில் கடலாதிக்கம் புரிந்தும்,

படையை எதிர்த்து — 'துணிவே துணை' யென்று சவால்விட்டு நிற்கிறது ... படை தோற்றின் எப் ... என்று அறைகூவி நிற்கிறது தமிழர்படை!

கொண்டு தாக்கத் தருணம் பார்த்து நிற்கிறது தமிழர் படை! இதுவரை காட்டு மிருகங்களை வேட்டையாட பயன்படுத்தும் கல்லாயுதமும் வில்லாயுதமும் கொண்டு தான் தாய் நாட்டை வேட்டையாட வந்த நயவஞ்சகப் பேய்களை எதிர்த்துப் பயன்படுத்தியது நல்லூர்ப் படை! பழைய ஆயுதங்கள்...... ஆனுல் புதிய உத்திகள்! நல்லூர்ச்சேனைக்கு இது வோர் சத்தியப் போர்... ஆனுலும் கத்தியைத் தீட்டித்தானே ஆக வேண்டும்?

உலகிலேயே முதன் முதலாக வெள்ளை இனத்தவர்களில் கீழைத்தேச நாடுகளை அடிமைப்

இடங்களில் கரையேற புறப்பட்டனர் முதலில் கரையோர நாடுகளைக் கையாடினர் அது அவர்களுக்குச் சுலபமாகவிருந்தது.

அப்படியே வாய்ப்புக் கிடைத்த இடங்களில் ஒவ்வோர் நாடாக தம் காலடியில் வீழ்த்தி கோட்டைக் காட்டிலே தமது கொடுமை ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டு யாழ்ப்பாண இராச்சியத்தில் கண் வைத்தனர்.. ... அதனுல் கண்மண் தெரியாது போர் மூண்டது வேற்று நாடுகளிலே போர் புரிந்து சுலபமாக வெற்றியீட்டிய வெள்ளைப் பறங்கியர் யாழ்ப்பாண இராச்சியத்தில் அடி

### பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர்அரசு (பகுதி எட்டு-அ)

படுத்தி ஆதிக்கம் புரியத் துணிந்தவர்கள் போர்த்துக்கேயப் பறங்கியர் தான். அக்காலத்தில் கடலோடுவதில் சிறந்து விளங்கிய அவர்கள் வியாபாரமென்று புறப்பட்டு விபரீதம் செய்ய விழைந்து கீழைத்தேச நாடுகளின் துறைகண்ட

வாங்கிக் கொண்டனர். போர்க்களத்தில் அவர்களுக்கு உயிர்ச்சேதம், உடற்சேதம் அதிகமாகி மனநிலைகுழம்பி தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்த வேளை தான்...... தரங்கம்பாடியிலிருந்து வந்த புதிய பறங்கிச்

(7ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பரம ஆண்டியும் பைங்கிளியும்

சுவர்ணபுரி அரசன் ஒருநாள் ஒரு நரி வந்து தன்முன்னாட்டில் சிரிப்பது போலக் கனவுகண்டான். திடுக்கிட்டுக் கண்விழித்தவன் பரபரவென்று பள்ளியறையைவிட்டு வெளியே வந்து நாட்டிலுள்ள அறிவாளிகளையெல்லாம் தன் சபைக்கு வரவழைத்தான்.

அவர்களிடம் கனவில் நரி வந்து சிரித்ததைச் சொல்லி அதன் பலனைச் சொல்லும்படி கேட்டான் அவர்கள் எவராலும் அரசன் கண்ட கனவுக்குச் சரியாகப் பலன் சொல்லமுடியவில்லை.

அப்போது ஓர் ஆற்றங்கரை ஓரமாக ஓர் ஆண்டி வந்துகொண்டிருந்தான். திடீரென ஆலமரப்பொந்திலிருந்த கிளி ஒன்று அவனை நோக்கிப் பறந்து வந்தது.

"ஆண்டி சற்று நில். அரசன் கண்ட கனவுக்கு உண்டான பலனை நான் உனக்குச் சொல்லுகிறேன் அதை அப்படியே நீ போய் அரசனிடம் தெரிவித்து அவன் அதற்குத் தரும் சன்மானத்தை நமக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுவோம்" என்றது.

ஆண்டி அதற்கு ஒத்துக்கொண்டான்.

கிளி சொன்னது.

"நீ நேரே அரசனிடம் போய்—இந்த வருடம் நாட்டுநிலை மிகவும் மோசமாக இருக்கும். எங்கும் பொய்யும் வஞ்சனையும் தலைவிரித்தாடும். நீர் வேசியாரையும் நம்பிவிட வேண்டாம். உறவினரையும் ஊழியரையும் கூடக் கண்காணித்து வாரும் இவ்வளவுதான். போய் வா!" என்றது

கிளி சொன்னதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டு நேரே அரசனிடம் சபைக்குப் போனான். அரசனின் கனவில் நரி வந்து சிரித்ததற்கான பலனைத் தெரிவித்தான்.

அரசன் மகிழ்ந்து பொன்னும் மணியுமாக நிறையப் பரிசுகள் கொடுத்தான் ஆனால் ஆண்டி அவற்றைப் பகிர்ந்து கிளிக்குக் கொடுக்காமல் வேறுவழியால் தன் குடிலை அடைந்தான்.

ஒரு வருஷம் ஓடிற்று. அரசன் இன்னொரு கனவு கண்டான் அவன் தலைக்குமேல் ஒரு வாளும் பூமாலையும் தொங்குவது போன்ற காட்சி. அரசன் திடுக்கிட்டுக் கண்விழித்து சபையைக் கூட்டி 'அந்த ஆண்டியைக் கூட்டிவாருங்கள் அவன் வந்து இந்தக் கனவின் பலனையும் சொல்லட்டும்'' என்று சொன்னான்.

உடனே சேவகர்கள் ஓடிப்போய் ஆண்டியை அழைத்தார்கள் அவர்களிடம் கனவின் விவரத்தைக் கேட்டுக்கொண்டு சற்று நேரம் தாமதித்து வருவதாகச் சொல்லிச் சேவகர்களை அனுப்பிவைத்தான்.

என்ன செய்யலாம் என ஏதேதோ யோசித்துக்கொண்டு ஆற்றங்கரையோரமாக நடந்து வந்தான் ஆலமரப் பொந்திலிருந்து அந்தக் கிளி அவனிடம் பறந்து வந்தது.

"ஆண்டி சற்று நில். நான் 'பால அரசனுடைய கனவின் பலனைச் சொல்லித் தருகிறேன் போய் அரசனிடம் தெரிவி'' என்றது ஆண்டியோ வெட்கத்துடன் தலைகுனிந்து நின்றான்.

அப்போது கிளி "இந்த வருஷம் நாட்டில் இரத்த ஆறு ஓடும் பெரிய போர் நடக்கும் ஆனால் முடிவில் நீர்தான் வெற்றி பெறுவீர்!! இவ்வளவுதான். அரசனிடம் போய்த் தெரிவி'' என்றது.

அதற்கு ஆண்டி "அப்படியே செய்கிறேன். ஆனால் இம்முறை உனக்குச் சேரவேண்டிய சன்மானத் தொகையைத் தந்துவிடுகிறேன்.'' என்றான் கிளி அதற்கு 'நீ உனது வார்த்தையைக் காப்பாற்றவில்லைதான். ஆனாலும் பரவாயில்லை இம்முறை போய்வா'' என்று சொல்லி பறந்து போய்விட்டது. ஆண்டி அரண்மனைக்குப் போனான் அரசனிடம் போர் வாள், பூமாலை கனவுக்கான பலனைத் தெரிவித்தான்.

(மிகுதி அடுத்த வாரம்)

—த உமையாள்



## கேள்வியும் பதிலும்

1. பறவைகளுள் அடைகாக்கும் ஆண்பறவை எது?
   தீப்பறவை
2. மிருகங்களுள் ஞாபசக்தி மிக்கவை எவை?
   குதிரை, நாய், பூனை, யானை
3. விலங்குகளுள் அதிக தூரம் பாயக்கூடியது எது?
   கங்காரு
4. பிராணிகளுள் நீந்தத் தெரியாதன எவை?
   பன்றி, ஒட்டகம்
5. பாம்பு ஏன் கண்மூடுவதில்லை?
   இமை இல்லை
6. முட்டையிட்டவுடன் இறக்கும் பூச்சி எது?
   பட்டுப்பூச்சி
7. ஒட்டகம் சுமக்கக்கூடிய அதிக பாரம் எவ்வளவு?
   500 கிலோ கிராம்
8. கறையான் ஒரு மணித்தியாலத்தில் எத்தனை முட்டைகள் இடும்?
   மூவாயிரம்
9. பெரியயானை தந்தத்தின் நிறை?
   55 கிலோகிராம்
10. மனித மூளையின் சாதாரண நிறை?
   ஒன்றரை கிலோகிராம்

தொகுப்பு:- தெ இன்பகுமார் (கொக்குவில் இந்துக்கல்லூரி)

## கடமை செய்வோம் வாரீர்!

கடமையின் பலனெல்லாம் கடவுளால் வருவன
கடவுளை நம்பினால் கடமையைச் செய்க
மணமுள்ள மலரை வண்டுகள் நாடும்
கடமை செய்வோரைச் சாதனை தேடும்.

அவரவர் கடமையை அவரவர் செய்தால்
அகில மெல்லாஞ் சுவர்க்க மாகும்
எல்லோரும் நம் ஊராகும்
யாவரும் ஒரு தாய் பிள்ளைகளாவர்

சுயநல மென்பது துளியுமில்லாது
பிறருக்காக செய்வது கடமை
தூய கடமையில் சூதணுகாது
சூழ்ச்சிகள் புரிவோர் கடமை செய்யாரே.

தன் மனச்சாட்சி சரியெனும் வரைக்கும்
செய்ய வேண்டியதைச் செய்வது கடமை
கடமையைச் செய்து மிஞ்சிய வேளையில்
தேச சேவைகள் செய்வோர் வாரீர்!

தில்லைச்சந்திரன் - ரகுராம் (யாழ். மத்திய கல்லூரி)

## நாடுகளும் நாணயமும்

| | |
|---|---|
| பிரித்தானியா | பவுண் |
| ரஷ்யா | ரூபிள் |
| இலங்கை | ரூபா |
| ஹொங்கொங் | டொலர் |
| பஹ்ரெயின் | தினார் |
| பெல்ஜியம் | பிராங் |
| மேற்கு ஜேர்மனி | டொய்ச்மார்க் |
| இந்தியா | ரூபா |
| ஜப்பான் | யென் |
| இத்தாலி | லீரா |
| பாகிஸ்தான் | ரூபா |
| டென்மார்க் | குரோன் |
| சிங்கப்பூர் | டொலர் |
| பிரெஞ்சு | பிராங் |
| குவைத் | தினார் |
| சுவிற்ஸர்லாந்து | பிராங் |

தொகுப்பு: க சிவகாமி

## பெண்மைக்குப் பெருமையம்மா!

— வி. எஸ். செல்வராஜா

தொடை தெரிய உடை அணிந்து
நடைபயிலும் பெண்மாதே
மடை திறந்த வெள்ளம் போல்
உடலழகை காட்டல் ஆகாதே
சடை போட்ட பின்னலிலே சரம்தொடுப்பதனை
முறையாகப் பயில்வதற்கு முந்திடுவாய்
அடைகாக்கும் கோழியைப்போல் உன்
அழகைக் காப்பதற்கு அடம்பிடிப்பாய்
உடை அழகால் உன் அழகை உயர்த்திடவே
நீ நினைத்தால் அந்தோபரிதாபம்.
நடையழகும், உடையழகும், பிற அழகும்
போலியம்மா
உள்ளத்தழகே பெண்மைக்குப் பெருமையம்மா.

## பயனுள்ள சில தகவல்கள்

நெப்டியூன் கிரகத்தைக் காலி என்பவர் கண்டுபிடித்தார்.

மனிதனின் உடலில் உள்ள எலும்புகள் 206 என கணக்கிடப்பட்டுள்ளது.

தக்காளி பழமா காய்கறியா என்று சந்தேகப்படத்தேவையில்லை. தக்காளி பழம்தான்.

மனிதனின் விரல் நகம் ஆண்டுக்கு இரண்டரை அங்குலம் வளர்கிறது

ஒரு சிப்பியில் முத்து வளர்வதற்கு சுமார் 15 ஆண்டுகள் எடுக்கும்

கல்கத்தாவில் மூவாயிரம் விழுதுகள் உள்ள ஆலமரம் ஒன்று இருக்கிறது.

காந்தக்கல்லின் மறுபெயர் லோட் ஸ்ரோன் என்பதாகும்.

கருநிற நாக்குள்ள நாயினம் 'சௌ' என அழைக்கப்படும்

அலஸ்காவில் பாம்புகளே கிடையாது.

(தொகுப்பு: செல்வி. விஜிதா. கனகராஜா யாழ்-இந்து மகளிர் கல்லூரி.

# அடிமை நிலை அழித்த திரௌபதை காலம் அழிக்காக் காவிய தலைவி

ஓர் ஆணின் வெற்றி பெண்ணிலேயே தங்கியுள்ளது 'மனைத்தக்க மாண்புடையாள் ஆகித் தற்கொண்டான் பேணி வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' என்று வள்ளுவன் இல்லறவியலில் கூறியது போல மனைக்கேற்ற மாண்புடைய பெண்ணாகவும் தன்னைக் கொண்ட அருச்சுனனின் வெற்றிக்குப் பின்னணியாகவும் திகழ்ந்த திரௌபதி என்ற மகாபாரதக் காவியத் தலைவியை இன்றைய சமுதாயத்தை வழிநடத்தக் கூடிய பண்புகள் பல கொண்ட ஒரு காவியத் தலைவியாகவே காண்கின்றோம் மச்சயந்திரத்தைக் குறித்த நிபந்தனைப்படி வீழ்த்திய அருச்சுனனுக்கு மாலை சூடிய திரௌபதி அருச்சுனனோடு மாத்திரமின்றி அவன் சகோதரருடனும் பிணைந்து வாழ்க்கையில் ஐவருக்கு அச்சாணியாகி அளப்பெரிய பெருமைக்குரியவளாகின்றாள்

ஆண் புத்தி அவசரப்பட்டு விடும். பெண் புத்தி பின்னுக்கு வரவிருப்பதை முன்னுணர்ந்து செயல்படும் தன்மை கொண்டது என்பதை திரௌபதை நிரூபிக்கிறாள். உதிஷ்டிரன் தன்னைத் தோற்ற பின் மனைவியை வைத்துச் சூதாடியதற்குத் தான் காரணியாக அமையப் போவதில்லை என்று அவள் வாதாடிய திறனும் சபைக்கு வர மறுப்பதும் அவளின் அறிவாற்றலையும் அஞ்சாத தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றன பெண் அதிகாரத்தையும் பெண் ஆற்றலையையும் ஏற்றுக்கொள்ள மறுத்து பெண்களைப் பகடைக்காய்களாக ஆட்டிப்படைக்கும் இன்றைய சமுதாயத்தின் அங்கத்தவர்களுக்குத் திரௌபதியின் பாதை இன்னும் ஒரு சவுக்கடியாகவே இருக்கிறது. பெண்ணடிமைக்குச் சாவு மணியாகவும் உள்ளது

பெண்கள் சிறுவர் பல குற்றங்களைத் தெரிந்தும் தெரியாதது போலிருக்கும் 'மடம்' 'பேதமை' ஆகிய குணங்கள் பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட போதிலும் தன் குடும்பத்திற்கும் குலத்திற்கும் ஆபத்து வரும் வேளையில் சிறிதும் சிங்கமெனப் பெண்கள் கூட எதிர்த்தெழலாம் என்பதை சமுதாயத்துக்கு எடுத்துக் காட்டுகிறாள் திரௌபதி.

காவியத்தில் வரும் நாயகிகளுக்கு கஷ்ட துன்பம் என்பது சிறப்பிலக்கணம் அதேபோல இந்த மகாபாரதத்தில் வரும் திரௌபதிக்கும் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. கம்பராமாயணச் சீதை இராவணனால் கடத்தி வைக்கப்பட்டிருந்தபோது இராமனைப் பிரிந்து வாழ்கின்றோமே என்ற ஒரேயொரு துன்பந்தான் அவளின் அடிமனதில் ஊசலாடியதே தவிர இராவணனால் எவ்விதமான மான பங்கத்திற்கும் உட்படுத்தப்படவில்லை சிலப்பதிகாரக் கண்ணகியும் வேற்று நாட்டில் மாற்றான் கையால் தன் மணவாளனை இழந்து ஆற்றுது அழ நேரிட்டாலும் அவளின் மானத்துக்குப் பங்கம் ஏற்படவில்லை.

கணவனையிழந்து சர்ச்சைக்குள்ளாகிய நாயகிகளைத்தான் காவியத்தில் நாம் பொதுவாக சந்திக்கின்றோம். ஆனால் மகாபாரதத்தில் வரும் திரௌபதி தன் மானம் மீது தவறிழைக்க முற்படும் அயோக்கிய கும்பலையே சந்திக்கிறாள்

கண்ணீரும் கம்பலையுமாக அவள் சபைக்கு இழுத்து வரப்படும் போது உடல் வலிமை மற்றுத்தான் போய்விட்டது ஆனால் உள்ள உறுதி உரமேறி விட்டது. அதிகார வெறிகொண்ட அரக்கனின் அரண்மனையிலே தன்மானம் பறிக்கப்படப் போவதை உணர்ந்த திரௌபதி தன்னையும் மீறிய நிலையில் ஆண்டவனை நினைக்கிறாள். கற்பாறையில் கட்டப்பட்ட கோபுரம் போல் மிகுந்திருந்த அவளின் இறைபக்தி அவளைக் காப்பாற்றுகிறது துகில் வளர்ந்து துச்சாதனன் முயற்சியை முறியடிக்கிறது. எனவே 'ஆண்டவன் சக்தி அனைவரையும் காப்பாற்றும்' என்பதை தற்கால சமுதாயம் உணர்ந்து கொள்வதற்கு திரௌபதியின் வாழ்க்கையில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தைவிட மிகையானது எதுவுமில்லையெனலாம்

இன்றையசமுதாயத்தை இறைபக்தியில் வழிநடத்த திரௌபதி என்ற காவிய நாயகி ஒரு பெரும் உதாரணமாக விளங்குகிறாள்.

(மிகுதி அடுத்த வாரம்)

அ. நிக்ஸன்

## எரிக்கும் பெண்

அலங்கார
விளக்கின்
நெருப்புத்தான்
அவள்
அன்பு
செய்தால்,
அழகுடன்
ஒளி வீசுவாள்!
அடக்க
நினைத்தால்,
அகிலத்தையும்
எரித்து விடுவாள்!

நிர்மலா
ஜெயபாலசாமி



## வளரும் பயிரை .....

பிள்ளைகளுக்குத் தாங்கள் சிறந்தவர்கள் என்பதை மற்றப் பிள்ளைகளிடம் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பு ஏற்படும். இந்தத் துடிப்பினால் அவர்கள் சித்திரங்கள் வரைந்து காட்டுவார்கள், வேகமாகப் படித்துக்காட்டுவார்கள். பாட்டுப் பாடிக்காட்டுவார்கள். இவைகளை எல்லாம் சேட்டைகள் என்று எண்ணி நாம் பிள்ளைகளை அதட்டக்கூடாது. பிள்ளைகளுக்கு எதில் ஊக்கம் இருக்கிறது என்பதைப் பார்த்து அவர்களைப் பெற்றோர்களாகிய நாம் பாராட்ட வேண்டும், ஊக்குவிக்க வேண்டும் புத்தகங்களை வாங்கிக் கொடுக்க வேண்டும். சித்திரம் வரையும் பிள்ளைகளுக்கு பெயின்ட் பிரஷ் வாங்கிக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளுக்கு எதில் ஆர்வம் இருக்கிறதோ, அதை அதிகப்படுத்தினால் அவர்கள் அந்தக் கலையில் சிறந்து விளங்குவார்கள்.



★ 2 வருடத்தில் திருமணம் ★ சிவாஜி ஒரு சிரஞ்சீவி

# நீண்ட நாட்களுக்குப் பின்னர் சிலுக்கு சுமிதாவின் ஒரு பேட்டி

தமிழ்ப்படவுலக ரசிகர்களின் கனவுக் கன்னியாகத் திகழ்ந்தவரான, விழியால் கொல்லும் வேல்விழியாள் சிலுக்கு சுமிதா தமிழ்ப் படங்களில் அதிகமாக நடிப்பதில்லை.

ஆனால் தெலுங்கு, மலையாளம், இந்திப் படங்களில் நடித்து வருவதாக அவர் கூறுகிறார்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் சிலுக்கு சுமிதா 'சினிமா மெயில்' சஞ்சிகைக்குப் பேட்டி ஒன்றைக் கொடுத்துள்ளார்.

பேட்டி இதோ:-

ஓய்வு நேரத்தில் என்ன செய்வீர்கள்?

சமையல் செய்வேன், புத்தகம் படிப்பேன்.

உங்களுக்குப் பிடித்த நடிகை, பிடித்த நடிகர் யார்?

ராதிகா... நல்ல தோழியும் கூட, எனக்கு மிகவும் பிடித்தமானவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் தான். அவரை மாதிரி வேறு ஒரு நடிகரைப் பார்க்க முடியாது. அவர் ஒரு சிரஞ்சீவி.

உங்களுக்குப் பிடித்த பாடல் எது?



''வந்தனம் மறப்பதில்லை...''

பிடித்தமான இடம்?

தெய்வமகள்.

இதுவரை நீங்கள் செய்யாத கேரக்டர் ஏதேனும் உண்டா?

அப்படி எதுவும் இருப்பதாக நான் நினைக்கவில்லை திரையுலகம் ஒரு கடல் சார். தெரிஞ்சுக்க வேண்டியது எவ்வளவோ இருக்கு

திருமணம் எப்போது?

இரண்டு வருடம் கழித்துத் தான்

## 'மூங்கில் கோட்டை' தயாராகின்றது

'ஊமைவிழிகள்' வெற்றிப் படத்தைத் தயாரித்த திரைச்சிற்பி நிறுவனத்தார் 'மூங்கில் கோட்டை' என்ற புதிய படத்தைத் தயாரிக்கிறார்கள்

இப்படம் 'ஊமை விழிகள்' படத்தின் இரண்டாம் பாகம் ஆகும்


கதை, திரைக்கதை, வசனம், பாடல்களை ஆபாவாணன் எழுதுகிறார். மனோஜ்-கியான் இசை அமைக்கிறார்கள்

இந்தப் படத்தை இயக்கும் பொறுப்பை ராஜாராமியும், ஒளிப்பதிவை செல்வகுமாரும் படத் தொகுப்பை அசோக்கும் ஏற்றிருக்கிறார்கள்

விஜயகாந்த், கார்த்திக் ஜெய்சங்கர், அருண் பாண்டியன் செந்தில், ஸ்ரீவித்யா, சசிகலா ஆகியோர் நடிக்கிறார்கள்.

### பொழுதுபோக்கு

ஓய்வு கிடைத்தால் டி. வி. முன் இருந்து விடுவாராம் ஊர்வசி. அம்மா சாப்பிட அழைத்தாலும் ... எழும்பமாட்டாராம்.



## புதுமுகம் கார்த்திகா அறிமுகம்

'பூவே பூச்சூடவா' படத்தை டைரக்ட் செய்த பாசில் இரண்டாவதாக டைரக்ட் செய்யும் தமிழ் படம் 'பூவிழி வாசலிலே'

இதில் சத்தியராஜுக்கு ஜோடியாக கார்த்திகா என்ற புதுமுகம் அறிமுகமாகிறார்.

## 'நாகூரார் மகிமை' விரைவில் தெரியும்

'நாகூரார் மகிமை' என்ற பெயரில் என். இக்பால் படம் ஒன்றைத் தயாரிக்கிறார். திரைப்படத் துவக்கவிழா அண்மையில் நடைபெற்றது

கவிஞர் நாகூர் சலீம் கதை வசனம், பாடல்கள் எழுதுகிறார். ஒளிப்பதிவை ... டி கொஸ்தா கவனிக்க, டி என்.எம். அலி திரைக்கதை அமைத்து இயக்குகிறார்

இந்தத் திரைப்படத்தில் முன்னணி நடிகர், நடிகையர்கள் நடிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது

நட்சத்திர தேர்வு நடைபெற்று வருகின்றது.

## எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தின் முதலாவது தலைவர் கே. ஆர். ஆர்.

எம் ஜி ஆர். ரசிகர் மன்றத்தின் 15,000 கிளைகள் உலகில் உள்ளன சுமார் 18 லட்சம் பேர் இக்கிளைகளில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இக்கிளைகள் எல்லாம் உலக எம் ஜி ஆர் ரசிகர் மன்றத்தின் கீழ் இணைந்து உள்ளன.

அண்ணாவின் கதை வசனத்தில் 'வேலைக்காரி' படம் மூலம் முன்னணிக்கு வந்தவர் நடிகர் கே ஆர் இராமசாமி.

● தயாரிப்பு: பேரின்பம் ●

இராமசாமிக்கு நடிப்பிசைப் புலவர் பட்டமும் உண்டு

அவர் எம் ஜி.ஆர். ரசிகர் மன்றத்தின் முதலாவது தலைவராக விளங்கினார்.

அவர் மறைவின் பின்னர் தான் முசிறிப்புத்தன் தலைவரானார். தொடர்ந்து 22 ஆண்டுகளாகத் தலைவராக இருந்து வருகின்றார்.

எம் ஜி ஆரின் புதிய படம் ஒன்று வெளியானால் முதல் சில தினங்களுக்கு தியேட்டர்கள் எம். ஜி ஆர். மன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே டிக்கற் விற்பனை செய்ய வேண்டும்'—

இப்படிப் ஒரு ஒப்பந்தத்தை எம் ஜி ஆர். ரசிகர் மன்ற சம்மேளனம் தியேட்டர் உரிமையாளருடன் செய்து கொண்டது.

இப்போது எம். ஜி ஆர். படங்கள் வருவது இல்லை. அதனால் மன்ற உறுப்பினர்கள் சிலம்பம், குத்து வரிசை விளையாட்டுக்களில் பயிற்சி பெற்று வருகின்றார்கள்.

இப்போது தற்பாதுகாப்புக்கு கத்தி வைத்திருக்கும்படி மன்ற உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் எம் ஜி ஆர் அனுமதி வழங்கியுள்ளார்.

எம். ஜி ஆர். ரசிகர் மன்றம் மூலம் தான் தமிழகத்தில் அ தி மு க கட்சி ஏற்பட்டது.

மன்றம் வேறு, அண்ணா தி மு க வேறு அல்ல. இரண்டும் ஒன்றே—

தகவல்— முசிறிப்புத்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளமையிலேயே வேதம் படியுங்கள்

வயதான பிறகுதான் வேதாந்த நூல்களைப் படிப்பது என்று வைத்துக்கொள்ள வேண்டாம். பார்வையும் அறிவுக்கூர்மையும் மழுங்கி உடலில் சோர்வு கண்ட பிறகு ஆர்வம் இருக்காது. இளமைப்பருவமே அதற்கு மிகவும் உகந்தது.

**சுவாமி சின்மயானந்தர்**

வேதாந்த நூல்களை ஏராளமான அளவில் ஒரே சமயத்தில் படிக்க முடியாது. படிக்கவும் கூடாது. பாலில் உறை யிட்டுத்தயிராக்குவதைப் போலக் கொஞ்சம்கொஞ்சமாகத்தான் படிக்க வேண்டும். ஒரு நாளைக்கு ஐந்து முதல் பத்துப் பக்கங்கள் வரையில்தான் படிப்பது உசிதம்.

படித்துக்கொண்டே வரும்போது சந்தேகங்கள் உண்டாகும். அவை அடிப்படையான சந்தேகங்களாகவே இருக்கலாம். பரவாயில்லை. அவற்றைத் தனியாகக் குறித்துக்கொண்டு தொடர்ந்து படியுங்கள். உண்டான சந்தேகங்களைப்பற்றி மேலும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம். ஒரு வாரம் படித்து முடித்த பிறகு, அந்த குறிப்புக்களைப் புரட்டிப் பாருங்கள்! ஆச்சரியமாக இருக்கும். அவற்றில் அநேக சந்தேகங்களிற்கு உங்களுக்கே விடை இப்போது தெரிந்திருக்கும்.

இந்த ஒரு வாரத்தில் உங்களுடைய மனப் பார்வை விசாலமாக ஆகிவிட்டது. அறிவுக்கு ஆழம் கிடைத்துவிட்டது. புத்தகத்தை முடிக்கும்போது, அநேகமாக உங்கள் சந்தேகங்கள் அனைத்துமே தெளிந்து போயிருக்கும்.

இளமையிலேயே படியுங்கள். மெதுவாகப் படித்துப் புரிந்துகொள்ள அப்போதுதான் நிறைய அவகாசம் இருக்கும். வயது ஆக ஆக உடலில் முதிர்ச்சி ஏற்படுவதைப் போல், உங்கள் மனமும் கனிந்து பக்குவமாகி விடும்.

# தமிழில் புதிதாய் எழுதியவரும் தமிழை புதிதாய் எழுதியவரும்

இந்தச் சமயத்தில் தரமான எழுத்துக்களைப் படிக்கும் நாகம் மக்களிடையே அதிகமாகக் காணப்பட்ட சரத்சந்திரர், காண்டேகர் போன்ற வங்க மாராட்டிய எழுத்தாளர்களின் எழுத்துக்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுப் பிரபலமாயின.

கல்கியை ஓர் ஆரம்ப கால 'ட்ரெண்ட்ஸெட்டர்' என்ற கருத்துடன் பார்க்கும்போது, இவரது எழுத்துக்களால் பதிக்கப்பட்டு ஓர் எழுத்தாளக் கூட்டமே உருவாகியிருப்பது புரிகிறது. இவர்களில், சரித்திரப் பாதையில் சாண்டில்யன், கோவி மணிசேகரன், விக்ரமன், ஜெகசிற்பியன் ஆகியோரையும் சமூக நாவல் எழுதுவதில் அகிலன், நா. பா. யும் நகைச்சுவைக்குச் சாவி ஆகியோரையும் குறிப்பிடலாம். கல்கியை அடுத்து எழுத்துலகில் ஒரு திருப்பத்திற்கு வித்திட்டவர் என்று பார்க்கையில் முதலில் நிற்பவர் ஜெயகாந்தனே. யதார்த்தத்தைக் கன

[இறுதிப் பகுதி]

னத்தில் அறையும் விதத்தில், தயங்காமல் சொல்லி, அதை மக்களை ஏற்றுக்கொள்ளவும் சிந்திக்கச் செய்யவும் வைத்த பெருமை இவ

### தமிழக நாவல்களின் வளர்ச்சியும் தேக்கமும்

ருக்கு உண்டு. யாரையும் தமக்கு குரு எனக் கொள்ளாமல், யாருடைய எழுத்தின் சாயலும் தம் எழுத்துக்களில் இல்லாமல் ஜனித்த ஜெயகாந்தன் உண்மையில் ஒரு ஸ்வயம்புதான். சமுதாயத்தில் மேல் எழுந்த அக்கறை காரணமாய் ஒருவிதத் தார்மீகக் கோபத்துடன் எழுதப்பட்ட இவரது எழுத்துக்கள் ஜாதி, மதம் ஏழை, பணக்காரன் என்கிற அத்தனை தடைகளையும் கடந்து நிற்பவை.

அவன் அவளை முத்தமிட்டான், என்று எழுதுவதைக்கூட வாசகர்கள் மூச்சு கனுக்கிவிடுவார்களோ என்கிற பயத்துடன் பத்திரிகைகள் தவிர்த்த காலத்தில் சமுதாயத்தின் இண்டு, இடுக்கெல்லாம் புகுந்து கருத்துக்களைத் தேடி, அதை எந்தவிதக் கருவனுலும் தயங்காமல் அவற்றுக்குத் தன் பேனாவின் துணையோடு மக்களின் நடுவில் இலக்கிய அந்தஸ்தை, ஜெயகாந்தன் தேடிக் கொடுத்த தற்கு இவரது கங்காவும், ஹென்றி சபரங்களுமே சாட்சிகளாகின்றனர்.

அசோகமித்திரனின் தண்ணீர், டி செல்வராஜின் தேனீர், சின்னப்பா பாரதியின் தாகம், பொன்னியனின் கொள்ளைக்காரர்கள், நாஞ்சில் நாடனின் தலைகீழ் விகிதங்கள், நீல பத்மநாபனின் உறவுகள், பள்ளிகொண்டபுரம் சுந்தர ராமசாமியின் ஒரு புளிய மரத்தின் கதை, நகுலனின் நினைவுப் பாதை நாய்கள், லா. சா. ரா வின் அபிதா போன்ற நாவல்கள் இன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

**சிவசங்கரி**

### ஏங்கினாள் ஒரு விதவை

- கோதை சம்பந்தன் -

கணவனை பிரிந்ததனால் கஷ்டமுற்ற ஓர் விதவை
அரசாங்க உதவி பெற, அரசாங்க அதிபர்
அலுவலகம் சென்றிருந்தாள்.

அரசாங்க அதிபரோ ஆசனத்திலில்லை
உயர் விகிதரிடம் சென்று, தன் தேவைதனை
எடுத்துரைக்க — அவரோ
நாய் போல் பாய்ந்து அப்பாலே செல் என்றார்
அவள் கண்கள் குளமாக காத்திருந்தாள்.
அதிபரும் வந்தார் அவள் காரியமும் சரியாயிற்று.
ஆவலுடன் தபாலகம் வந்து தனது
தருமப் பணந்தனைத் தரும்படி வேண்டினள்.
தபாலதிபரோ இன்று போய் நாளை வா என்றார்
இடி மேல் இடியிடிக்க இதயம் கலங்கியவள்
பத்து ரூபாய் செலவு செய்து பஸ் ஏறிவந்தேன்
என்றள்

அங்கும் ஒரு அடிநாய் அவள் மேல் பாய்ந்ததன்றே!
எங்கள் தமிழினத்தில் இப்படியும் மனிதர்களா?

பகட்டான உடையணிந்து பணக்காரர் வந்து
விட்டால்
பத்து நிமிடத்தில் பலகாரியம் செய்திடுவார் —
ஐயகோ
நெஞ்சம் எரிகிறதே நிலை கெட்ட ஊழியரை
நினைந்து விட்டால்
எங்கள் தமிழினத்தில் ஏன் தான் பிறந்தோம் என
ஏங்கினாள் — அவ்விதவை

எங்கள் தமிழினம் என்றுதான் விழித்திடுமோ?
இப்படி எத்தனை பேர் இன்னல் படுகிறார்கள்.
இத்துயர் துடைக்க எவர்தான் முன் வருவார்
வசதியோடு வாழ்ந்தால் வருவாளா
அப்பணத்திற்கு?

# மன்னனிடம் நீதி கேட்ட மாக்கள்:

## ஆராய்ச்சி மணி அடித்த குதிரையும் பசுவும்

சேக்கிழார் என்னும் மரபுப்பெயரை உடைய அருள் மொழித் தேவர் பெரியபுராணத்தை அருளிச் செய்தவர் இருவருடைய காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு ஆகும். பெரிய புராணத்திலே திருவாரூர்ச்சிறப்பு என்னும் பகுதியிலே ஓரரசன் கதை வருகிறது.

திருவாரூரை சோழ மன்னர் அரசாண்டனர். இவர்களில் தனிச்சிறப்பு மிக்கோன் மனுநீதி கண்ட சோழன், தன் மக்களுக்கு எக்குறையுமின்றி அரசாட்சி செய்ய வேண்டி, என்ற அவாவில் தனது அரண்மனை வாசலில் ஓர் ஆராய்ச்சி மணியைக்கட்டி வைத்தான். ஏதாவது குறையுடையோர் அம்மணியை அடித்தது அதனை அறிவித்தால் அவருக்கு நீதி வழங்கக் காத்திருந்தான் அம்மன்னன்.

அவனுக்கு ஒரே ஒரு மகன். விதிவிடங்கன் என்பது அவனது பெயர். ஒரு நாள் அவன் தேரூர்ந்து வீதியிற் செல்லும் போது ஒரு பசுவின் கன்று அவனது தேர்க்காலில் அகப்பட்டு இறந்து போயிற்று. இதனைக் கண்ட பசு அலறித் துடித்தது. அரற்றி மயங்கியது அதனது துயர் களைவார் எவருமிலர் அரசனிடம் சென்று முறையிடுவதே முறை என்று அவ்வாவிலைப் பிராணிக்குத் தோன்றியது போலும். எப்படி முறையிடலாம்? ஆராய்ச்சிமணி இருக்கவே இருக்கிறது அதற்கு வழி தெரிந்து விட்டது. ஓடிச் சென்று ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினுல் அடித்தது.

நீதிகேட்ட பசு

மணிஓசை கேட்ட மன்னன் துணுக்குற்றன். காவலரை ஏவி மணி ஒலித்ததன் காரணத்தை உசாவினன். அங்கு நீதி கேட்டு நின்றதோ பசு. இப்பசுவிற்கு நேர்ந்த துன்பம் யாதோ? அவனால் நிதானிக்க முடியவில்லை. அயலில் நின்றோரை விசாரித்தான் அவர்கள் இப்பசுவுக்கு நேர்ந்த கதியை எடுத்துக் கூறினர். அதற்கேற்ற பரிகாரமும் கூறினர். வேதவிதிப்படி பிராயச்சித்தம் செய்தலே தக்கது என்றனர். அரசன் திருப்தியடையவில்லை. கொலைக்குற்றத்துக்கு மரண தண்டனை. இந்நாட்டில் மக்களுக்கு மட்டுமல்ல மாக்களுக்கும் நீதி செலுத்தினுன் மனுச்சோழன் என்ற பெயர் உலகம் உள்ளளவும் நிலைக்கும் படியாக நடந்து கொண்டான் மன்னவன்.

தண்டனை விதிக்கப்பட்டது பசுக்கன்று எப்படி மரணமடைந்ததோ அதேபோல அதேபாணியில் தன் அருமைமைந்தனைத் தேர்க்காலின் கீழ் வைத்து தேரை ஏற்றித் தண்டனையை நிறைவேற்றினன் இந்த நீதியின் சிறப்பு எங்கேயெனில் மனிதருக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கும் கூடச் சோழநாட்டில் நீதி வழங்கும் வழக்கம் இருந்ததுதான்!

### காவிய நினைவுகள் கிழக்கும் மேற்கும்

**ஆங்கிலக் கவிஞர்**

இதே போன்றதொரு கதையை ஹென்றி வாட்ஸ்வோர்த் லோங்பெலோ என்ற அமெரிக்கக் கவிஞர் (1807 — 1882), ஆங்கிலத்தில் "ஆர்ட்ரி நகரின் மணி" என்ற கவிதயில் முன்னொருகாலத்தில் நடந்ததாக எழுதியிருக்கின்றர் இவர் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் தற்கால மொழியியல் பாடத்தில் பேராசிரியராக இருந்தவர் வயது முதிர்ந்த காலத்தில் சிறுவர்களுக்காக அநேகபாடல்கள் இயற்றி குழந்தைக் கவிஞர் என்ற பெயரையும் பெற்றர்.

இனிக் கதைக்கு வருவோம். ரோமசாம் ராஜ்யம் சிறப்புற்றிருந்த காலத்தில் "அப்ரூஸே" நாட்டில் "ஆர்ட்ரி" என்றொரு நகரம் இருந்தது இதனை ஆண்ட அரசன் "ஜோன்" என்பவன் இவனுடைய பெயரையுடைய அரசர்கள் பலர் பல நாடுகளில் அரசு செய்தபடியால் இவனது புகழ் பலருக்குத் தெரிய நியாயமல்லாது போய்விட்டது

**ஆராய்ச்சிமணி**

இவனும் நீதி வழுவாது ஆண்டு புகழ் மன்னன் தன் மக்களின் குறைகளைக் களைவதற்குச் சந்தை மைதானத்தில் ஓர் ஆராய்ச்சிமணியைக் கட்டி வைத்திருந்தான் குறையுடையோர் எவராயினும் இம் மணியை அடித்தாற் போதும். அவர்களது குறைகள் விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்படும் என்று முரசறைவித்திருந்தான்

இம்மணியினுல் எத்தனை வழக்குகள் விசாரிக்கப்பட்டனவோ? தீர்ப்புக் கூறப்பட்டனவோ? என்பது பற்றி இங்கு கூறவேண்டிய அவசியமில்லை ஆனல் ஒரே ஒரு தீர்ப்பை மட்டும் இங்கு கூறுகிறேன் என்று ஆரம்பிக்கிருர் கவிஞர்

அந்நகரில் பிரபுத்துவம் பெற்றவன் ஒருவன் வாழ்ந்து வந்தான் இளமையில் கண்டபடியெல்லாம் செலவு செய்து விணடித்துவிட்டு முதுமைக் காலத்தில் பணம் சேர்க்க வேண்டும் என்ற பேராசையால் தனது லாயத்தில் உள்ள குதிரைகள், கழுதைகள், கூட்டில் இருந்த கழுகுகள், வேட்டை நாய்கள் எல்லாவற்றையும் விற்றுப் பணமாக்கிக் கொண்டான். நிலங்களைக் குத்தகைக்கு விட்டான் ஆனல் ஒரு குதிரையை மட்டும் அவன் விற்கவில்லை அக்குதிரைக்கு ஒழுங்காக உணவு கொடுப்பதும் இல்லை பாழடைந்த வாசத்திலே அதனைக் கட்டி வைத்தான் அது ஒளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### உதுங்கா

ரால் வருந்தியது கேட்பார் எவருமிலர். வாயமோ துப்புரவு செய்வர் அற்று நாற்றமடித்தது

**குதிரை துரத்தப்பட்டது**

பிரபுவோ பணம் திரட்டுவதில் மிகக் கவனமுடையோனுக இருந்த படியால் இப்படிச் சிந்தித்தான். இக் குதிரையைத்தானுக ஏன் கட்டி வைத்துத் தீனி போடுவான். வீண் செலவு ஆயிற்றே வெளியே துரத்திவிட்டால் தன் வயிற்றைத்தானே பார்த்துக் கொள்ளும் தேவை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

## வட இந்தியாவை விஞ்சி நிற்கின்றது தென் இந்தியா (பகுதி II)

சரித்திரத்தைப்பார்த்தால் தெரிந்தோ தெரியமலோ அவர்கள்எப்பொழுதும் இவ்வாறே ஒழுகிவந்திருக்கிருர்கள் என்பது புலனுகும். பௌத்த மதத்தின் விஷயத்திலும் அவர்கள் இவ்வாறே செய்தார்கள். கடவுளுடைய ஏனைய அவதாரங்களைப்போல் புத்தரும் ஓர் அவதார புருஷர் என்று கூறி அவரையும் ஹிந்துக் கடவுள்களின் வரிசையில் சேர்த்துக் கொண்டுவிட்டார்கள் புத்தமத ஜனங்கள் வணங்கிப் போற்றினர்கள் ஆனல் அவருடைய முக்கிய உபதேசம் புறக்கணிக்கப்பட்டது பிராமண மதம் அல்லது ஹிந்துமதம் சில சிறிய மாறுதல்களுடன் தனது பழைய பாணியிலேயே சென்றுகொண்டிருந்தது. ஆனல் இவ்வாறு பௌத்த மதத்தை வைதீகமயமாக்குவதற்கு நீண்டகாலம் பிடித்தது. இந் நிகழ்ச்சி பிற்காலத்தில் நிகழ்ந்ததாகும். ஏனெனில், அசோகரின் மரணத்துக்குப் பின் பல நூற்றுண்டுகள் வரையில் பௌத்த மதம் இந்தியாவில் தழைத்திருந்தது.

மகத ராஜ்யத்தில் ஒரு வர்பில ஒருவராக வந்த அரசர்களைப்பற்றிய அவர்களுடைய பரம்பரைபற்றியும் நாம் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை அசோகன் இறந்த 200 ஆண்டுகளுக்குப்பின் மகதம் இந்தியாவில்தான் வகித்து வந்த முதன்மை ஸ்தானத்தை இழந்துவிட்டது ஆயினும் அது பௌத்த கலாசாரத்தின் கேந்திர ஸ்தானமாக விளங்கி வந்தது.

இதன் நடுவில், வடக்கிலும் தெற்கிலும் முக்கிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருந்தன வடக்கில், மத்திய ஆசியாவிலிருந்து பல ஜாதியாரும், வகுப்பாரும்— பாக்திரியர் (Bakrtians), சாகர், (Sakas), ஸிதியர் (Scythians), துருக்கியர் (Turkis), குஷாணர் (Kushans) இந்தியா மீது படையெடுத்து வந்த வண்ணமாக இருந்தனர். மத்திய ஆசியாவில் பல கூட்டத்தினர் தோன்றி அடிக்கடி எவ்வாறு ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பரவி வந்திருக்கிருர்கள் என்று முன்பு ஒரு தடவை சொல்லியிருக்கிறேன்.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட 200 ஆண்டுகளில் இத்தகைய படை எடுப்புக்கள் இந்தியாவில் பல நிகழ்ந்தன. ஆனல் இவைகளின் நோக்கம் நாட்டை ஜெயிப்பதும் கொள்ளையடிப்பதும் அல்ல என்பதை நீ நினைவில் வைக்க வேண்டும்.

குடியேறுவதற்கு ஓர் இடத்தை நாடியே அவர்கள் இவ்வாறு கிளம்பி வந்தார்கள். மத்திய ஆசியாவில் வாழ்ந்த ஜாதியர்களில் பெரும் பான்மையோர் ஓரிடத்திலும் நிலைக்காமல்

### நேருவிடம் இருந்து இந்திராவுக்கு

அலைந்து திரியும் நாடோடிகள் ஆவர். அவர்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க அவர்கள் வேறு புதிய இடங்களை நாடிப் புறப்பட்டு வந்தார்கள். இதைவிட முக்கிய காரணம் அவர்கள் பிறரால் விரட்டப்பட்ட தேயாகும். ஒரு பெரிய வல்லமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

சைவவித்தியா விருத்திச்சங்கத்தார் தமிழ் வழங்கும் பிரதேசமெங்கும் சைவப் பாடசாலைகளை ஆரம்பித்து நடத்தியதோடு, அங்கெல்லாம் ஆசாரசீலராயமர்ந்து படிப்பித்தற்குச் சைவாசிரியர்களைப் பயிற்றவும் தொடங்கி, நாற்பது பரப்புக் காணியில் நிரந்தரமான பாரிய கட்டடத்தையும் நிறுவுவாராயினர். இவற்றுக்கெல்லாம் வரையாது வழங்கியும் ஓயாது உழைத்தும் உதவி புரிந்தவர்களுள் திருநின்ற திருநெல்வேலி மக்களை எல்லோரும் வெகுவாகப் பாராட்டினுர்கள்.

முந்நூறுக்கும் அதிகமான ஆசிரியமாணுக்கர்கள் வசதியாக இருந்து பயிற்சி பெறுவதற்கான பாரிய கட்டடம் நிறுவப் பெற்றதைப் பார்க்குமாறு சங்கத்தார் பொது மக்களைக் கேட்டார்கள். மிக விரைவில் அங்கே பயிற்றப் பெற்ற ஆசிரியர்கள் பண்டைத்தமிழா பண்பாட்டுச் சிறப்போடு படிப்பிக்கப்போவதையும் எடுத்துக் கூறினுர்கள். ஆறுமுகநாவலர் அவர்கள் ஆரம்பித்த சைவக் கல்விப் பாரம்பரியத்தைத் தழுவித் தாம் பணி செய்வதற்கு முற்பட்டதையும் எடுத்து விளக்கினுர்கள்

**முதலீடு செய்க**

சைவப் பெருமக்கள் தங்கள் மேலதிக பணத்தை ஏதாவதொரு நிறுவனத்தில் முதலீடு செய்வதானுல், சைவம் வளர்க்கும் தாபனமாய சைவாசிரியகலாசாலைக்கு வேண்டிய படிப்பு மண்டபம், உணவுமண்டபம், படுக்கை மண்டபம் முதலியவற்றில் முதலீடு செய்யலாம் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

"ஒவ்வொரு சமயத்தோர்க்கும் ஒவ்வொரு பயிற்சிச்சாலை செவ்வித விருப்பச் சைவர்க்கிலாமையாலவர்க்குச் செய்த திவ்விய மென்னலாமோ" எனச் சைவாசிரிய கலாசாலைப் புராணம் பாடிய பண்டிதர் சு.இராசையா அவர்களின் பாடியாங்கு இக்கலாசாலை அமைந்தது.

"சைவாசிரியர்க்கோர் பயிற்சிச்சாலை வைத்திடக் காரைதீவு வரு மருணுசலப்பேர் மெய்க் விளை வளர்க்க வென்றே" என்று மகிழ்வர்.

**மெய்தவஞ் செய்தவர்**

நல்ல முறையிலமைந்த சைவாசிரிய கலாசாலையை நிறுவிய கௌரவ சு. இராசரத்தினம் மெய்த்தவஞ் செய்தவர் என்றுபோற்று

### சைவாசிரிய கலாசாலைக்கு ஏற்றும் தீபம்

தவன் செய்த தொண்டு மேதினி மறக்கற் பாற்றே" என்று பெருமிதங் கொள்ளும் புராணமுடையார், "நாவலர் காட்டு நல்ல வழியினிற் செல்லச் சைவக்காவலரான இராமநாதரும் பிறருங்கூடி ஆவலாய்ச் சைவ வித்தியாவிருத்திச் சங்கந்தன்னைக் காவலாய் வைத்தார் சைவக்

வர். "எத்திசை தனிலும் இராசரத்தினமாகப் போற்றும் அத்தரு நாமத்துள்ளோன் அத் துவக் காத்துவாவோன் மெய்த்தவ முடையோன் சட்டசபைதனில் மேவுங்காலை வைத்தனர் பெரியோர் சங்க மனேஜராய்த்தொண்டு செய்ய" ...

சைவத்தொண்டினுக்களவுமுண்டோ பன்னெடுங்காலஞ் சைவர்க்கிலாதவோர் பயிற்சிச்சாலை மன்னிய திருநெல்வேலி மாண்பதி வைத்தான் சைவர் என்னமா தவமோவென்ன இருபத்தெட்டாண்டாமெல்லை"

அன்று 1928 ஆம் ஆண்டின் விஜயதசமி நாளில் சேர்ந்த பன்னிரவரோடு நாளடைவில் வந்து சேர்ந்த ஆறு பேருடன் பதினெண்மர் ஓராண்டுப் பயிற்சி முடித்து இரண்டாம் வருடமணுக்கராய் இருந்த காலத்தில், 1929 ஆம் ஆண்டில் பயிற்சி பெறச் சேர்ந்தவர்கள் முப்பத் திருவர் முதல் வருடமாணுக்கராய் இருப்ப ... பெற்று வந்தார்கள். ... காலத்து வழக்கத்து கமையப் பேராசிரியர்கள் மத்தியில் உடனுறைந்து படித்து வந்தார்கள்

**பிரயத்தனம்**

இவர்களின் சைவப் பொலிவைக் கண்டு பூரித்த கௌரவ இராசரத்தினம் அவர்கள் ஆறுமுகநாவலர் வழியில் உருவாகி வந்த பண்டிதமணி அவர்களை எவ்விதத்திலும் சைவாசிரிய கலாசாலையில் பேராசிரியராய் அமர்த்துவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்தார்.

பண்டிதமணி அவர்கள் 1929 ஆம் ஆண்டின் ஆவணி மாதத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சியை நிறைவு செய்து கொண்டு வெளியேறும் சமயம் அவர் நாவலர் பாடசாலையில் ஆசிரியராய் அமர வேண்டியவர் நாவலர் காவிய பாடசாலையில் உருவானதோடு ஆறுமுகநாவலர் அவர்களின் தர்மச்சொத்தில் உண்டியும் உறைவிடமும் பெற்று வந்தவர். எனவே ஓரளவில் செஞ்சோற்றுக்கடன் தீர்க்க வேண்டிய கடப்பாடும் அவருக்கிருந்தது. அவரை விரைந்தேற்றுக் கொள்வதற்கு நாவலர் பாடசாலை முகாமையாளர் ஆயத்தமாகி நாள் களை எண்ணிக் கொண்டிருந்தார்

ஆனல் வளர்ந்து வந்த சைவாசிரியகலாசாலைக்கு நாவலர் பாரம்பரியத்தில் வந்த பண்டிதமணி அவர்களின் சேவை அவசியம் தேவையெனக் கருதிய கௌரவ இராசரத்தினம் அவர்கள், ஸ்ரீமத் கைலாசபிள்ளை அவர்களைக் கண்டு இதமாகப் பேசிய போது, இருகரப் வாதல் வேண்டும் என்று இராசரத்தினம் அவர்கள் விண்ணப்பித்ததைக் கைலாசபிள்ளை அவர்கள் மறுக்க முடியாமல் மனந்திரும்பினுர்

**பண்டிதமணிக்கு நிபந்தனை**

பண்டிதமணி அவர்களைச் சைவாசிரியகலாசாலையிற் பணியாற்றுவதற்கு விட்டுக் கொடுப்பதில் கைலாசபிள்ளை அவர்கள் ஒரு நிபந்தனையையும் விதித்தார். அந்நாவலு அன்று நாவலர் பாடசாலையில் தலைமையாசிரியராய் இருந்த கொக்குவில் கலட்டி யூர் இளையதம்பி அவர்கள் 1935 ஆம் ஆண்டில் ஓய்வு பெறவுளதால், அவர் ஓய்வு பெற்றதும் அவரிடத்தில் தலைமை ஆசிரியராய்ப் பதவி வகிப்பதற்குப் பண்டிதமணி வந்து பொறுப்பேற்

**✶ க. சி. குலரத்தினம் ✶**

பினரும் ஒரு பகலெல்லாம் வாதப்பிரதிவாதங்கள் செய்து நின்றபோது. பண்டிதமணி அவர்களின் மனம் ஊஞ்சல் போல இருபக்கமும் ஆடியது ஈற்றில் அன்றைய சூழ்நிலையின் சைவாசிரியர்களின் பெருமையில் உருவேண்டும் என்பதாகும்.

இத்தகைய உடன்படிக்கையோடு பண்டிதமணி அவர்கள் 1929 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் சைவாசிரிய கலாசாலையில் பேராசிரிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் புதிய குடிவரவுச் சட்டம்; அகதிகள் விடயத்தில் பாதிப்பு உண்டாக்குமா?

"இலங்கைத் தமிழர் அகதிகளை ஏற்றுக்கொண்டது தேசிய பருவமை, கௌரவம் மிக்க செயல்" — என்று கனடாவில் இருந்து வெளிவரும் 'மக்லீன்ஸ்' (Mac-lean's) வாரசஞ்சிகை அட்டைப்படக் கட்டுரை ஒன்றை பிரசுரித்துள்ளது.

அக்கட்டுரையில் கனடாவின் குடிவரவுக் கொள்கை பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அதன் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

கனடாவின் குடிவரவு அமைச்சர் பதவியை திரு. ஜெர்மி வீய்னர் ஏற்று ஏழு மாதங்கள் தான் ஆகின்றன.

திரு வீய்னர், மொன்றீல் தொகுதி எம். பி. யாக சமஷ்டி நாடாளுமன்றத்தில் இருக்கிறார்.

கனடாவில் உள்ள சுமார் 16.000 இலங்கைத் தமிழரின் பெரும்பாலோர் மொன்றீல் நகரில் வாழ்கின்றனர்.

அத்லாந்திக் கடலில் படகுகளில் தத்தளித்த 155 இலங்கைத்தமிழ் அகதிகளைக் காப்பாற்றியது குறித்து அமைச்சர் என்ன சொல்கிறார் தெரியுமா?

"இச்செயலுக்காகக் கனடிய பிரசை என்ற முறையில் நான் பெருமிதம் அடைகிறேன்" — இப்படி அமைச்சர் சொன்னார்.

தேச கௌரவத்தைப் பேணும் செயல் இது — இப்படியும் அமைச்சர் வர்ணித்தார்.

யுத்தம், அடக்கு முறைச் சம்பவங்கள் காரணமாக வந்த அகதிகளைக் கனடா முன்னர் ஏற்றதில்லை.

1939 இல் கனடாவின் பிரதமராக திரு.மக்கென்ஸி கிங் இருந்தார் சென்லூயி கப்பலில் அப்போது தப்பி ஓடிவந்த 900 ஐரோப்பிய யூதர்களுக்கு அடைக்கலம் கொடுக்க திரு. கிங் மறுத்து விட்டார். அவர்கள் பிரான்ஸுக்குத் திரும்பிச் சென்றனர். அவர்களில் பெரும்பாலோர் நாஸி முகாம்களில் மரணமானார்கள்.

25 ஆண்டுகளின் பின்னர் நானூறு (400) சீக்கியர்களை வான் கூவரினுள் நுழையவிடாமல் கனடா கடற்படையினர் திருப்பி அனுப்பினர்.

## உலகமகா யுத்தத்தின் பின்னணி

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் கனடா மனிதாபிமானத்துக்கு முக்கியத்துவம் வழங்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது

நாட்டுக்குள் வரும் அகதிகளை தங்கள் குறைகளைத் தெரிவிப்பதை உறுதிப்படுத்தும் 1951 இல் உருவான ஐ. நா. உடன்பாட்டில் கனடாவும் கையெழுத்திட்டது.

இப்போது அகதிகள் சம்பந்தமான கொள்கையை மீளாய்வு செய்வதில் கனடா ஈடுபட்டுள்ளது.

வேறு நாடுகளில் அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பித்தவர்களுக்கு கனடாவில் அகதி அந்தஸ்து கோர முடியாதபடி கனடாவின் குடிவரவுச் சட்டம் மாற்றி அமைக்கப்படவுள்ளது.

(அநேகமாக அது 1987 ஜனவரி தொடக்கம் அமுலுக்கு வரும்)

கடந்த மே மாதம் தான் இப்புதியகொள்கை அறிவிக்கப்பட்டது 1951 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் தடவையாகக் கொண்டு வரப்படும் இம்மாற்றம் அடுத்த வசந்த காலத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிகிறது.

ஐ. நா. உடன்பாட்டில் கூறப்பட்ட அடக்குமுறை பீதிக்குள்ளாக்கப்பட்டனர் என்ற விதியை துஷ்பிரயோகஞ் செய்வதைத்தடுக்கவே கனடா இம் மாற்றத்தைக் கொண்டு வரவுள்ளது.

ஆண்டு தோறும் கனடா வந்து சேரும் சுமார் 8,000 அகதிகளில் மிகச்சிறிய எண்ணிக்கையினரையே இம்மாற்றம் பாதிக்கும் என்று கூறப்படுகிறது. எனினும் புதிய மாற்றம் குறித்து மனித உரிமை, தேவாலயப் பிரமுகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்

சர்வதேச மன்னிப்புச் சபைப் பேச்சாளரும் ரொறெண்டோ சட்டத்தரணியுமான திரு மைக்கல் ஷூ சொல்கிறார்:-

'எம் மனித பாரம்பரியத்தின் ஒரு பகுதிதான் சர்வதேச சமூகத்தின் உணர்வுகளை மதிக்கும் தன்மை. நாட்டுக்குள் அகதிகளாக வருபவர்களை விசாரணை செய்யாமல் திருப்பி அனுப்புவது கண்டிக்கப்படவேண்டிய விஷயமாகும்.''

## கனடாவும் ஜேர்மனியும்

கடந்த ஆண்டு கனடாவில் அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பித்த 1,565 பேர்களில் அரைவாசிப்பேர் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டனர்.

இதற்கு முரணாக தஞ்சம் அடைந்த இலங்கைத் தமிழரில் 10 சதவிதமானோரையே மேற்கு ஜேர்மன் அரசு ஏற்றுள்ளது

கனடாவினுள் வந்த பின்னர் அகதிகள் அந்தஸ்து கோர தமிழர்களுக்கு உரிமை உண்டு என்றாலும், விஸா இன்றி நாட்டுக்குள் நுழைய முடியாத நிலையை கனடா ஏற்படுத்தியுள்ளது

தங்கள் தாயகத்துக்கு வெளியில் முகாம்களில் இருந்த 12 இலங்கையருக்கு கடந்த ஆண்டு கனடா அகதி அந்தஸ்து வழங்கியது

## தமிழ் அகதிகளுக்கு கஷ்டம்

ஐ நா. அகதி உடன்பாட்டின் கீழ் வழங்கப்பட்ட உரிமையை இலங்கைத் தமிழ் அகதிகள் நிலைநாட்டவேண்டும் என்றால், கஷ்டமான சர்வதேச பாதைகளைக் கடந்தோ அல்லது மோசடி செய்யப்பட்ட பாஸ்போட்டுக்களுடனோ அல்லது மோசடிக்காரர்களுடைய உதவியுடனோ தான் கனடாவினுள் நுழைய வேண்டுமா?

இப்படி கனடாவின் அகதிக் கொள்கைபற்றி விமர்சிப்பவர்கள் கேட்கிறார்கள்

இந்தக் கஷ்டங்கள் தமிழர்களுக்கு மட்டும் உரியவை அல்ல.

அகதிகளை உருவாக்கக் கூடிய பெரிய நாடுகளின் பிரசைகளுக்கு இந்த விஸா நிபந்தனையை கனடா வலியுறுத்துகிறது.

இந்த நிபந்தனை இல்லாவிடில் பொய்யான தகவல்களைக் கொண்ட ஏராளமான விண்ணப்பங்கள் வந்து குவிந்து விடும் – என்று கனடா கூறுகிறது.

கடந்தஜூலையில்தான் அகதி உரிமை கோரல் சம்பந்தமான துஷ்பிரயோகம் வெளியானது.

ஆனால் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்காக போடப்படும் தடைகள் உண்மையான அகதிகள் பயனடைவதைத் தடுக்கிறது – இப்படி விமர்சகர்கள் கூறுகின்றனர்

## மனிதநேய பாரம்பரியம் கைவிடப்படுமா?

தனது மனிதநேய பாரம்பரியத்தை கனடா கைவிடுகிறதா என்ற கவலை, கனடாவின் உத்தேச அகதிக் கொள்கை மாற்றத்தைப் பார்க்கும் திருச்சபை, மனித உரிமைப் பிரமுகர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அதே நேரத்தில் சில தீவிரமான திருத்தங்களை சட்டத்தில் புகுத்த அமைச்சரவை மறுத்திருப்பது குறித்து இப்பிரமுகர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

ஒருவர் தனது தாயகத்திலிருந்து நேரடியாக கனடா வந்து சேர்ந்தால் மட்டுமே அகதி அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்று நிபந்தனை போடும் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள கனடா அரசு மறுத்து விட்டது.

தாயகத்தில் இருந்து வேறு ஒரு நாட்டுக்குப் போய் அங்கிருந்து கனடா வந்து அகதிகள் அந்தஸ்து கோருவது கனடா அரசினால் தொடர்ந்து அனுமதிக்கப்படும். ★

## தமிழில் புதிதாய் எழுதிய...

(5 ம் பக்கத் தொடர்ச்சி)
றைய சமூகச் சூழ்நிலையில் மனிதனின் வாழ்வியல் சிக்கலைச் சொல்லுகின்றன. இன்றைய நிலையில் மனித வாழ்வுக்குப் பொருள் உள்ளதா? அப்படியிருந்தால் அது என்ன என்ற கேள்வியைக் கூர்மையாக இவை எழுப்புகின்றன.

சா. கந்தசாமியின் சாயாவனத்தில் சமுதாயச் சீரழிவைக் கண்டு அவருள் பொங்கும் வேதனை, ஓர் ஊமைக் கோபமாய்க் கதை பூராவுமே பரவித் தெரிகிறது. அடுத்து முக்கியமாய் குறிப்பிடவேண்டிய எழுத்தாளர்கள்— இந்திரா பார்த்தசாரதியும், ராஜம் கிருஷ்ணனும்......

இது போல வண்ண நிலவனின் கடல் புரத்தில் புதினமும், மீனவர்களின் சமுதாயம், வாழ்க்கை நடப்பு பற்றி விரிவாகச் சொல்லுகிறது. வண்ண நிலவனின் எழுத்தில் சமூகத்திடம் அவர் கொண்டுள்ள பரிதாபம், நீ உயரவேண்டுமே என்கிற ஆதங்கம் நிறையவே உணர முடிகிறது

முன்னோடி என்ற வரிசையில் அடுத்ததாக சுஜாதாவைச் சொல்லலாம். தமிழில் புதுசாய் எழுதினவர் ஜெயகாந்தன். ஆனால் தமிழைப் புதுசாய் எழுதினவர் சுஜாதா என்று ஒரு கேள்வி பதிலில் எழுத்தாளர் மாலன் சொன்ன மாதிரி, இதுவரை யாருமே கையாளாத நூதனச் சொற்கள். வரிகளை வெகு இயல்பாக உபயோகித்து உரைநடையில் சுஜாதா பெரும் மாற்றத்தைச் செய்திருக்கிறார் என்று நான் சொல்லவேண்டும். இத்துடன், இன்று பெருமளவுக்கு, துப்பறியும், கொலை, கொள்ளை ஸயன்ஸ் ஃபிக்ஷன், நாவல்களும் பலரால் எழுதப்படுவதற்கு இவரே பாதை போட்டவர்.

எழுபதுகளில் துவங்கி இன்றும் வெகுஜனப் பத்திரிகையில் பிரபலமாக எழுதிக் கொண்டிருப்பவர்களில் ஸ்ரீ வேணுகோபாலன். இந்துமதி, வாஸந்தி. சிவசங்கரி ஆகியோர் முக்கியமானவர்கள், மனோதத்துவ கண்ணோட்டத்தில், பெண்களின் போராட்டங்களை விவரித்துக் கதை எழுதுவதில் வல்லவரான வாஸந்தி தம்மை ஒரு ஃபெமினிஸ்ற் என்று வெளிப்படையாகவே சொல்லிக் கொள்கிறவர். சமுதாய பிரச்சினைகளை ஊடுருவிப் பார்த்து எழுதியதற்காக சிவசங்கரியின் நெருஞ்சி முள். ஒரு மனிதனின் கதையும் ஆராய்ச்சி பூர்வமான எழுத்துக்காக 'பாலங்களும்' வாசகரிடையே வரவேற்கப்பட்டன.

எழுபதுகளின் கடைசியில் புதிதாய்த் துவங்கி தங்களின் வித்தியாசமான எழுத்துக்களால் தனித்து நிற்பவர்களில் பால குமாரனையும் அனுராதாரமணனையும் குறிப்பிடலாம்.

எஸ். ஏ. பி வி ஆர். ராகி ரங்கராஜன். தமிழ்வாணன், மணியன், உமா சந்திரன், ரசு நல்லபெருமாள், கிருஷ்ணமணி ஆகியோர் தங்கள் மாறுபட்ட எழுத்துக்களுக்காகவோ, அல்லது நிறைய எழுதியதற்காகவோ குறிப்பிடப் பட வேண்டியவர்களே.

இது நாழிகை மேற்கோள் காட்டியுள்ள எழுத்தாளர்கள், அவர்கள் நாவல்களைத் தவிர இன்று பலருடைய எழுத்துக்களும் பேசப்பட வேண்டியவைகளே என்றாலும், எல்லோரையும் குறிப்பிட இடமின்மை காரணமாய் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்களையும், வித்தியாசமான எழுத்துக்களால் தனித்து நின்றவர்களையும் எடுத்துக்கொள்வது மட்டுமே சாத்தியமாகிறது.

அன்று தொடங்கி ஓரளவுக்கு இன்றுவரை தமிழில் வெளியான நாவல்களைப் பார்த்து விட்டோம். தலைப்பில் கேட்டிருக்கும் வகையில் தற்சமயம் நாவல்களில் காணப்படுவது வளர்ச்சி இல்லை. தேக்கமா என்றால் என்றால் இதற்கு கட்டம்கட்டிப் பதில் சொல்லமுடியவில்லை.

சரித்திரதில் எந்த ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் வளர்ச்சியும் தேக்கமும் மாறி மாறி வரும் ஒரு சுழலாகக் காணப்படுவது போலத்தான் இந்த நாவல் சமாசாரமும் என்று எனக்குத் தோன்றுகின்றது வளர்ச்சி என்றாலே மாற்றம்தான். மாற்றம் என்றாலே அது தேய்வு அல்லது வளர்ச்சி தான். ஏதோ ஒன்று இருந்தால்தான் அது மாற்றம் ஆகும், இப்படி எதுவும் வளர்ந்து தேய்ந்து மாறும்போதுதான் புதுமைகள் உண்டாகின்றன. பழையன கழிகின்றன. பின்னர் ஒரு தேக்கநிலை வந்து மீண்டும் புதுமை தலை எடுக்கிறது, இது இயற்கையின் நியதி.

இக்கருத்தை மனதில் கொண்டு சிந்திக்கையில் அறுபது எழுபதுகளில் பல நுட்பமான விபரங்களையும் புதுசு புதுசாய் விவரிக்கக்கூடிய வேகத்துடனும் வளர்ந்து எழுந்து இப்போது கண்களைச் சுழற்றிப் பார்த்த வரைக்கு சமீபத்தில் எதையும் சாதிக்காதது புரிகிறது இது தேக்க நிலைதான் என்றால் ஆம் தேக்கம்தான். இல்லை, இல்லை வளர்ச்சியினூடே ஆசுவாசப் படுத்திக்கொள்ள எடுக்கும் ஓய்வு என்றால் அதுவும் சரிதான்.

மொத்தத்தில் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. இப்போது இருக்கும் எழுத்தாளர்களை மீறிக் கொண்டு புதிய தலைமுறை எழுத்தாளர்கள் உருவாகும் புதுக் கண்ணோட்டத்துடன், இதுநாள் வரை இல்லாத ஒரு புதுமையும் புதுசாய் எழுச்சியில் மலர்வதும் சாத்தியமாகும்.

(நன்றி: கலைமகள்)

★

## காலத்தால்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)
பொருந்திய ஜாதியார் மற்ற ஜாதியார்களைத் துரத்தி விடுவார்கள். இவ்வாறு துரத்தப்பட்டவர்கள் மற்ற நாடுகளின் மீது செல்வார்கள். ஆகவே இந்தியாவுக்குள் படையெடுத்து வந்தவர்கள் தங்கள் சொந்த நிலபுலன்களினின்றும் துரத்தப்பட்டு வேறு புகலிடம் இன்றி இங்கு வந்தவர்களேயாவர். சீன சாம்ராஜ்யம் ஹான் வமிசத்தாரின் கீழ் இருந்தது போன்ற வல்லமையுடன் இருந்த காலங்களிலெல்லாம் இந்த நாடோடிகளை ஒட்டி வந்தது. அதனாலும் இவர்கள் வேறு உறைவிடங்களைத் தேடிச் செல்ல வேண்டியதாயிற்று.

மத்திய ஆசியாவிலிருந்து வந்த இந்த நாடோடி ஜாதியார் இந்தியாவை ஒரு விரோதி நாடாகப் பாவிக்கவில்லை. அவர்கள் 'காட்டுமிராண்டிகள்' என்று அழைக்கப்படுகிறார்கள். இந்தியாவில் அக்காலத்தில் வாழ்ந்தவர்களைப் போல் அவர்கள் அவ்வளவு நாகரிகமானவர்களல்ல என்பது உண்மையே. ஆயினும் அவர்கள் பௌத்த தருமத்தில் தீவிரமான பற்றுதல் கொண்டவர்கள். அத்தருமத்தின் தாயகமான இந்தியாவை அவர்கள் மிகவும் போற்றினார்கள்.

புஷ்யமித்திரன் காலத்திலேயே வடமேற்கு திக்கிலிருந்து பாக்திரியா (Baktria) வைச் சேர்ந்த மினண்டர் (Menander) என்பவன் படையெடுத்து வந்தான். அவன் ஒரு சிறந்த பௌத்தன். இந்திய எல்லையை அடுத்திருந்த தேசம் பாக்திரியா என்பது. அது செலூகஸின் சாம்ராஜ்யத்தில் ஒரு பகுதியாக இருந்தது பிறகு அதனின்றும் பிரிந்து சுதந்திரமாக இருக்கத் தலைப்பட்டது மினண்டரின் படையெடுப்பு எதிர்த்து வெல்லப்பட்டதாயினும் அவன் காபூலையும் சிந்துப்பிர[illegible] [illegible]றிக் கொண்டான்.

## மன்னனிடம் நீதி...

(5ம் பக்கத் தொடர்ச்சி)
யானபோது பிடித்துக் கொண்டு உபயோகிக்கலாம்''. இச்சிந்தனை செயற்பட்டது உடனே குதிரையை கடும் பனி நிறைந்த ஒரு நாளில் வெளியே துரத்திவிட்டான்.

குதிரைக்கோ வேதனை. இதுவரை காலமும் ஒழுங்கான உணவில்லை. இருப்பிடம் இல்லை. நான் இம் மனிதனுக்கு எப்படியெல்லாம் சேவை செய்தேன். ஆனால் நன்றி இல்லாத இம் மனிதனோ என்னை வயோதிப வயதில் இப்படி வெயிலிலும் பனியிலும் இரக்கமில்லாது வெளியே துரத்தி விட்டானே என்ன செய்யலாம் என்று வருந்தியபடியே தன்பாட்டில் சென்றுகொண்டிருந்தது.

தெருநாய்கள் அதனைத் துரத்தின மூட்கள் அதன் உடலைக் கிறிக் கிழித்தன. வேதனை மிகுதியால் தனக்கிழைக்கப்பட்ட கொடுமையை யாரிடம் சொல்வது என கடுமையாக யோசித்தது இறுதியில் சந்தை மைதானத்தை அடைந்தது. அங்கிருந்த ஆராய்ச்சி மணியின் கயிற்றைக் கடித்து இழுத்து மணியை அடித்தது

மணி அடிப்போரின் குறைகளைக் கேட்டு நீதி வழங்க நீதிபதி ஒருவரை அரசன் நியமித்திருந்தான் மணி ஓசை கேட்டு நீதிபதி அங்கு வந்தார். நின்றதோ குதிரை அவரால் குற்றத்தை தீர்மானிக்க முடியவில்லை. அங்கு நின்ற மக்களோ இக்குதிரை குறித்த பிரபுவின் குதிரையென்றும் இதனை அப்பிரபு நன்கு கவனிக்காது துரத்தி விட்ட வரலாற்றையும் எடுத்துக் கூறினர்.

உடனே நீதிபதி அப்பிரபுவை அழைத்தார் இக்குதிரை இளமைக் காலத்தில் உனக்கு எவ்வளவோ சேவை செய்தும் அதனைக் கவனியாது விட்டது உனது நன்றியில்லாத் தன்மையையும் உனது புகழ் அழியப் போகிறது என்பதையும் காட்டப் போகிறது. எனவே இக்குதிரை உயிருடன் உள்ளவரை இதற்கு ஒழுங்காக உணவும் உறையுளும் நீ கொடுக்க வேண்டும்'' என்று தீர்ப்பளித்தார்.

கீழைத்தேசத்தவர்களுக்கு பசு எவ்வளவு முக்கியமானதோ அதே போல மேலைத்தேசத்தவர்களுக்கு குதிரை மிகவும் முக்கியமானது. எனவே இவ்விருகதைகளும் அவ்வந்நாட்டிற் கேற்ற கலாசாரங்களின் பின்னணியில் பாடப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். மேற்கென்ன கிழக்கென்ன எஞ்சி நிற்பது மானிடமே. ★

## பண்டித...

(5ஆம் பக்க தொடர்ச்சி)
ராய் நியமனம் பெற்று ஒளி காலச் செய்தார். இந்தச் சிறப்பினைக் கலாசாலைப் புராணமுடையார் உளங் கொண்டு பாடுவாராயினர்.

''சீரிய நற்குணங்கள் பல சேர்ந்த ஆழி செந்தமிழ்த்தேன் மழைபிலிற்றுஞ் சிறந்த மேகம். ஆரியமும் செந்தமிழும் அமைந்த குன்றம், ஆசிரிய கலாசாலைக்கேற்ற தீபம், ஒரியல்புமில்லாத வெல்லைத்தானும் ஒருபொருளாய் மதித்துதவி செய்தவள்ளல், பாரிலுயர் மட்டுவிலைப்பதியார் கொண்ட பண்டிதனுங் கணபதிப்பிள்ளை மதியோன்''


(வளரும்)

## மதிவழி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
விபீஷணனுக்கு ராமர் அடைக்கலம் கொடுத்தார். இலங்கைக்கு அரசனாகினார். இலட்சுமணன் ராமரைப் பார்த்து கேட்டார். 'இராவணன் தங்களிடம் தஞ்சம் புகுந்தால் அயோத்திக்கு அவனை அரசராக்குவீரா?'' அதற்கு ராமர் அப்படி இராவணன்தஞ்சம் புகுந்தால் அயோத்திக்கு அவனை அரசனாக்குவதில் சிறிதும் தயங்கேன்'' என்றார்.

## சொற்சிலம்பம்

போட்டி இல. 38



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ..............................

..............................

வயது: ..............................

விலாசம்: ..............................

..............................

ஒப்பம்: ..............................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பப் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்.

**இடமிருந்து வலம்**

1. கம்பன் மகன்
5. பெண் ஆட்டின் பெயர் மாறி வந்துள்ளது.
6. ஒரு சமஸ்கிருத நாடகம்
9. அழகான பெண்களை இவளுக்கு ஒப்பிடுவர்
10. வலிமை மிக்க
11. மணிமேகலையின் கையிலிருந்த அட்சய பாத்திரம்
13. உறுப்பு
14. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சேர்ந்த அமைப்பது
15. 'பாக்கு'த் தருவது இந்த மரம் தான்
17. பொருந்தும்
18. இளம் பெண்

**மேலிருந்து கீழ்**

1. மரியாதை தவறிய செயல்
2. தாமதித்து என்பதைக் குறிப்பது குழம்பிவந்துள்ளது
3. வலிமை குழம்பி விட்டது.
4. பல ஜனநாயகநாடுகளில் அமைச்சரவைக்குத் தலைமை வகிப்பவர் அவர் பதவி தலைகீழாக இருக்கிறது.
7. பாய்தலைச் சார்ந்தது
8. இராவணனிடம் இருக்கிறது
10. தமிழ் உரை நடை வித்தகர்களில் ஒருவரின் பெயரில் இரண்டு எழுத்துகள் விழுந்து விடடன
11 இடமிருந்துவலம்13
12. புகைத்தலுக்கு இது ஒரு குளுகுறிப் பெயர்.
13. வடிவு
14 வாசல்களில் இருப்பது ஆனால் பின் பகுதியை இழந்து நிற்கிறது
15. திருமணமாகாத பெண் கடைசி எழுத்தை விட்டு நிற்கிறாள்.
16. ஆதிகால மனிதரின் வசிப்பிடம்

### சொற்சிலம்பம் இல. 36 விடைகள்

| இடமிருந்து வலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1. சபதம் | 4 மதி | 1. சதுப்பு | 2. பலா |
| 6. துலாம் | 7. தரணி | 3. தம்பி | 4 மரபு |
| 8. பிறப்பு | 10. புசி | 5. தணி | 7 தப்பு |
| 12. தரு | 13 சுவாதி | 9. கருமி | 11 சிசு |
| 16. நவமி | 18. துறைமுகம் | 12. தவம் | 14. வாதுமை |
| 20. முதுமை | 22. கல் | 15. திறை | 16 நகல் |
| 24 குதி | 25. தோடு | 17. கமுகு | 19 முகடு |
| 26. கலி | | 21. துதி | 23. வலி |

### சொற்சிலம்பம் இல. 36 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு: செல்வி. கிருஷ்ணகுமாரி ஆறுமுகம்
'மணல்' வியாபாரிமூலை,
பருத்தித்துறை

இரண்டாம் பரிசு: செல்வன். எஸ். சுதர்ஷன்
வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.

மூன்றும் பரிசு: திரு க. சுந்தரகுமார்
'இந்து மஹால்'
பழைய புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு

★ குறிப்பு:-
பரிசு பெற்றவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர். பரிசுப் பணத்தைப் பெறுவதற்கு பத்திரிகையில் வெளியான பெயருக்குரியவரே உரிய அடையாளஅத்தாட்சிகளுடன் நேரில்வரவேண்டும் எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் பரிசுப்பணம் கையளிக்கப்படமாட்டாது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரியூட்டும் குண்டுத் தாக்கம் பாதுகாக்க சில மார்க்கங்கள்

எரியூட்டும் குண்டொன்று வீசப்பட்டு தீப்பற்றியுள்ளதாயின் குண்டின் தீயையா அல்லது பரவிக்கொண்டிருக்கும் தீயையா முதலில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டுமென்பதற்கு நியதி எதுவும் கிடையாது. அது அச்சந்தர்ப்பத்தைப் பொறுத்து எதனை உடனடியாக அணைக்காவிடின் கூடியளவு பதிப்பை ஏற்படுத்தும் என்பதைக் கருத்திற் கொண்டே செயலாற்ற வேண்டும். எது எவ்வகையாயிருப்பினும் தீயானது எமது கட்டுப்பாட்டை மீறுதிருக்கு

## பகுதி- II

மாறு பார்த்துக்கொள்வதே முக்கியமானதாகும்.

மாடிக் கட்டடமொன்றின் மேற்பகுதியிலோ அல்லது கூரையிலோ இவ்வகைக்குண்டு ஒன்று விழுந்து எரிந்து கொண்டிருந்தால் உடனடியாக அக்குண்டினால் வெளிப்படும் தீயையே அணைக்க முயலவேண்டும். இல்லாவிடின் அது வெளிவிடும் வெப்பத்தினால் விழுந்திருக்கும் தரைப்பகுதியைத் துளைத்து அதன் கீழே இருக்கும் அடுத்த மடிக்கு தீயைப் பரவச் செய்துவிடும் எச்சந்தர்ப்பத்திலும் எரியூட்டும் குண்டு ஒன்றினது மக்னீசியம், தேமைற் போன்ற பிரதான பொருள்கள் மிக உக்கிரமாக எரிந்து கொண்டிருக்கும்போது அதன் அருகே செல்வது மிகவும் ஆபத்தானதாகும்.

வெப்பம் தாக்காவண்ணம் சிறிது தொலைவில் இருந்தே நீரைச் செலுத்துவதற்கு முனையவேண்டும். இதற்கு நீரிறைக்கும் கருவியை சரியான முறையில் இயக்குதல் வேண்டும். எளிய நீரிறைக்கும் கருவியானது பொதுவாக மூவரால் மிக இலகுவாகவும் வேகமாகவும் இயக்கப்படக்கூடியது. அதன்போது நீரை வாளிகளில் கொண்டுவர ஒருவரும் கருவியின் ஆடுதண்டை இயக்க ஒருவரும், நீர்க்குழாயைப் பிடித்து நீரைப் பாய்ச்ச ஒருவரும் இயங்கினால் விரைவாகத் தீயைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் அவசர நிலையில் இருவரோ அல்லது ஒருவரோ கூடவும் இதனை இயக்கலாம்.

நீர் பாய்ச்சுவதற்கு பயன்படுத்தும் குழாயானது தேவையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படவேண்டும். பொதுவாக அரை அங்குல விட்டமும் 30 அடி நீளமுமுடைய குழாயொன்றே பயன்படுத்தப்படுகிறது. ஓரே சமயத்தில் இரண்டு, மூன்று பாத்திரங்களில் நீர் நிறைந்து இருக்குமாறு பார்த்துக் கொண்டால் தாமதமின்றி மிகவிரைவாகத் தீயைக் கட்டுப்படுத்திவிடலாம். சரியான வகையில் திறமையாகச் செயலாற்றினால் மூன்று வாளி நீர் போதுமானதாகும்.

அடுத்து மணல் மூலம் எவ்வாறு இவ்வகைக் குண்டுகளை அணைக்கலாம் என்று பார்ப்போம். மணல் அல்லது உலர் மண்ணைக் கொண்ட மூடைகளாலோ அல்லது அவற்றை தனியாக உபயோகிப்பதாலோ இவ்வகைத் தீயை அணைக்கலாம். இதற்கு உங்களால் தூக்கக்கூடியளவு சிறிய மணல் மூடைகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு மூடையினுள்ளும் அதாவது முக்கால் பங்கே நிரப்பக்கூடியவாறு மணலோ அல்லது உலர் மண்ணோ இருப்பதுதான் விரும்பத்தக்கதாகும். பின் அதனை இருகைகளாலும் தூக்கி உங்கள் முகத்திற்கு காப்பாக முன்புறம் தூக்கிப் பிடித்தபடி எரிந்து கொண்டிருக்கும் குண்டை நோக்கி முன்சென்று அதன் எல்லாப் பகுதியையும் மூடுமாறு மூடையை அதன்மேல் போடவும். எரியூட்டும் குண்டானது அதன் பின்னர் பாரியசேதம் எதனையும் ஏற்படுத்தாது உள்ளேயே எரிந்து அணைந்துவிடும். ஆனால் வெடித்துச் சிதறக்கூடிய விதத்தில் உயர் வெடிமருந்தைக்கொண்ட எரியூட்டும் குண்டுகளாயின் மேற்கூறிய முறை சாத்தியமற்றதாகும். ஏனெனில், இவ்வகைக் குண்டுகள் விழுந்து ஒரு சில செக்கன்களுக்குள்ளாகவே வெடித்துச் சிதறக்கூடியன.

இனி உங்கள் உடலின் மேல் மக்னீசியம் அல்லது தேமைற் துகள்கள் விழுந்து எரிந்துகொண்டிருக்குமாயின் அதற்குரிய உடனடியான செயற்பாடுகளைப் பற்றிப் பார்ப்போம். எரியும் மக்னீசியத் துகள்கள் உங்கள் உடலின்மேல் விழுமாயின் மிக விரைவாக எரிந்து தோலினூடாக உள்ளே சென்றுவிடும். எனவே அவை உடனடியாக அகற்றப்படவேண்டியவை. இவற்றை முற்றாக அகற்றுவதற்கு சிறந்த பயிற்சி தேவையாயிருக்கும். மருத்துவர்களின் உதவியுடன் முதலுதவி பயிற்சி பெற்றவர்கள் இதற்குரிய பயிற்சியையும் பெற்றிருப்பின் மிக இலகுவாகவும் விரைவாகவும் அவற்றை அகற்றிவிடலாம். இருப்பினும் இவ்வகையானவர்கள் எவரும் அருகில் இல்லாவிடின் அவர்களுக்காக காத்திருந்து நேரத்தை வீணாக்காது சாவணம் போன்ற கருவிகள் ஏதாவதொன்றின் உதவியுடன் நீங்களாகவோ அல்லது வேறொருவரின் உதவியுடனோ அதனை அப்புறப்படுத்திவிடுங்கள். எரியும் தேமைற் துகள்கள் உங்கள் உடல்மேல் விழுந்திருப்பின் உடனடியாக அவற்றின்மேல் நீரை ஊற்றி குளிரப்பண்ணிய பின்னரே அகற்றவேண்டும். பொதுவாக இவ்வகை எரியூட்டும் குண்டுத்துகள்கள் உடலினுள் துளைத்துச் செல்லக்கூடியவையாதலால் சந்தர்ப்பத்தைப்பொறுத்து குளிரப்பண்ணுதலோ அல்லது அகற்றுதலோ எதனை உடனடியாகச் செய்வேண்டும் எனத் தீர்மானித்து அதனை முதலில் செய்யுங்கள். இவ்வகை எரியூட்டும் குண்டுகளால் தாக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி செய்யும்பொழுது இக்கட்டுரை தரப்படும் மூன்று நிலைத்தீக்காயங்களிற்குரிய முதலுதவி முறைகளையே பின்பற்றுங்கள்.

(வளரும்)

> ‘நெற் செய்கையில் பயிர் பாதுகாப்பு’
> தொடர் கட்டுரையின் இரண்டாம் பகுதி அடுத்தவாரம் வெளிவரும்.

# திராட்சைப்பழ உற்பத்தி: பலன் தரும் சில உத்திகள்

இன்று திராட்சைச் செய்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்குரிய பல காரணங்களில் அதிகரித்து வரும் செலவினங்களும் பிற மாவட்டங்களுக்குப் பழங்களை விற்பதற்கு எடுத்துச் செல்வதிலுள்ள சிரமமும் அடங்கும். இக் காரணிகளை விட கொடிகளில் பிடிக்கும் கொத்துக்களின் தொகை கடந்த சில போகங்களில் குறைவாகக் காணப்பட்டமையும் அவற்றை அறுவடை செய்யும் வரை பாதுகாப்பதிலும் உள்ள கஷ்டங்களும் முக்கியமானவை. நிலவும் காலநிலையும், கொடிகளை முறையாக வளர்த்தெடுத்தலும், உரிய முறையில் கத்தரித்தலும், அதிகளவு குலையுண்டாக ஏதுவாயிருக்கும். உண்டாகிய குலைகளை விவசாயிகள் அறுவடை செய்யும் வரை பாதுகாப்பு வழி முறைகளைக் கைவண்டு காப்பாற்றியாக வேண்டும்.

அண்மைக்காலங்களில் எமது சந்தைகளில் விற்பனைக்கு விடப்படும் திராட்சைப் பழங்களும் பிற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவனவும் தரக் குறைவாகக் காணப்படுவது கண்கூடு. சுவையான இனிப்பான பழங்களைப் பெறுவதில் சுவாத்தியமும், வர்க்கமும் பெரும் பங்கேற்கின்றன. எமது பிரதேசத்தில் வளர்க்கப்படும் 99% கொடிகள் ‘இஸ்ரேல் புளு’ என்றழைக்கப்படும் இனமாகும் காலநிலை, செய்கையாளர் கட்டுப்பாட்டில் இல்லாதிருப்பினும் கொடிகளைக் கத்தரிக்கும் கால நேரத்தை மாற்றியமைத்துப் பழங்களை வெப்ப நாட்களில் முதிர்ச்சியடையச்செய்து அவற்றின் இனிப்புத் தன்மையை ஓரளவிற்குக் கூட்டலாம். பழங்களின் வெளித்தோற்றம் அவற்றைப் பாதிக்கும் நோய் நொடிகள், வேறு பீடைகளின் தாக்கத்தில் பெரிதும் தங்கியுள்ளது. அவற்றைக் கட்டுப்படுத்துவதில் செய்கையாளர் அதிக பங்கை வகிக்கலாம். இவற்றுள் அழுக்கணவன் அல்லது வெண் மூட்டைப்பூச்சி (Mealy

**‘ஆராய்ச்சியாளன்’**

Bug), நீற்றுப்பூஞ்சணம் அல்லது தூள் பூஞ்சணம் அல்லது இலைக்கீழ்ப் பூஞ்சண நோய் (Downy Mildew), மாப்பூஞ்சணம் (Powdery Mildew), காகம், குருவிகள், அணில் ஓணான், ஒந்தி போன்றவற்றின் தாக்கங்களில் இருந்து தங்கள் பழக்குலைகளை ஓரளவிற்காவது காப்பாற்றுவது பற்றிய அறிவு எமது செய்கையாளரிடம் இருக்கின்றது.

கடந்த சில போகங்களில் பழங்களில் கராவல் தாக்கம் வருடாவருடம் அதிகரித்து வந்தபோதும் அதன் காரணமறியாது முந்திரிகைச் செய்கையாளர்கள் பெரிதும் கஷ்டப்பட்டார்கள். இதன் காரணமாகத் தங்கள் பழங்களைக் குறைந்த விலையில் விற்கவோ அல்லது தீவிரமாகத் தாக்கப்பட்ட குலைகளை வெட்டி எறியும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இதனால் பல செய்கையாள

## கராவல் தாக்கமும் கட்டுப்படுத்தும் வழிகளும்

ருக்குப் பலத்த நட்டமேற்பட்டது. யாழ் மாவட்டத்தில் வருடாவருடம் உற்பத்தியாகும் சுமார் 35,000 தொன் பழத்தில் 5 — 10 சதவிகிதம் வரை இத்தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளாகின்றது என்று கணிக்கப்படுகின்றது. கராவல் பழத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் அறிவுக்குறைவினாலும், அவதானக்குறைவினாலும் யாழ் மாவட்டம் ஆண்டிற்குச் சுமார் ரூபா 20-30 இலட்சம் இழக்க நேரிடுகிறது. இவ் இழப்பு தவிர்க்கக்கூடிய, தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும்.

கமம் புலம்

### கராவல் தாக்கத்தின் இயல்புகள்

பூக்கொத்துக்களையோ அல்லது மிகச்சிறிய பிஞ்சுகளைக் கராவல் தாக்கினால் அவை சிறிது காலத்தில் கருகிக் காய்ந்து சருகிவிடும். ஓரளவு பிஞ்சுக் காயாக இருந்தால் காயின் மினுமினுப்புத் தன்மை அகன்று, சொறசொறப்பாகவும் சரடுமுரடாகவும் காய்கள் காட்சியளிக்கும் இளமையில் பாதிப்புற்ற காய்கள் வளமுற்று வளர்ச்சி இழந்த தோற்றத்தைக் கொடுக்கும் தீவிரமாகத் தாக்கப்படும்போது மேற்றோலில் ஏற்பட்ட சரடுமுரடான வடுக்கள் பழ வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க இயலாது வெடித்து உள்ளிருக்கும் விதைகள் கூடக் கண்ணுக்குப் புலப்படும். இவ்வாறான காயங்களூடாக சில பங்கசு உட்புகுந்து வேறு தாக்கங்களை ஏற்படுத்தலாம். தாக்கப்படும் குருத்திலைகள் சிறியனவாயும், குறுகி வளைந்து விளிம்புகளிலும் நரம்பிற்கிடையிலும் எரிவுற்ற தோற்றத்தை அளிக்கும்.

அதிகம் பாதிப்புக்குள்ளாகாத காய்களில் சிற்சில இடங்களில் இரும்புக்கறள் நிறம், பச்சைக் காய்களில் படர்ந்திருப்பதை அவதானிக்கலாம். திராட்சைக் காய்களிலும் பழங்களிலும் கபில நிறக் கோடுகள் அல்லது வலைபோன்ற தோற்றம் அல்லது மான் தோல் போன்ற காய்ந்த அலங்காரக் கோடுகள் கராவல் தாக்கத்தின் அறிகுறி என்று அறியலாம்.

(வளரும்)

# சிறைக்கூடங்களில்...,

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குவார்கள்

**அடியினால் இறந்தவன்**

திருமலையை சேர்ந்த சந்திரன் எனும் அப்பாவி இளைஞன் அடியினால் இறந்தான். அவனது தம்பியும் அங்கேயே சிறையிலிருந்தான்.

இராகுலன் எனும் இளைஞனை விசாரணை என்று கூட்டிச் சென்று சுட்டுக் கொன்றனர்.

நாம் அங்கே எம் மரணத்தின் வாசலிலேயே நின்றோம்.

இரும்புக் கம்பிகளை சூடாக்கி உடம்பிலே குறி வைப்பார்கள். மேஜர் ஒருவர் இதற்கென பாகிஸ்தான் சென்று பயிற்சி பெற்று வந்ததாக அறிந்து கொண்டோம்.

**தண்ணீரின் மாயம்**

காலையிலே தினமும் ஒரு கிளாஸ் தண்ணீர் கட்டாயப்படுத்தி தருவார்கள். அது தண்ணீர் அல்ல மலட்டுத்தன்மையை உருவாக்கும் திராவகம் என்று ஒரு சிங்கள சிப்பாய் சொன்னார்.

இதனால் அந்நீரை நாம் குடிக்காது இரகசியமாக ஊற்றுவோம்.

நாதன் எனும் இளைஞனுக்கு அந்நீரை குடித்ததால் உடம்பு வீங்கி மறதி, கசம் போன்ற வியாதிகள் ஏற்பட்டன.

வவுனியாவில் மாற்றம்

வவுனியாவில் இரு மாதங்கள் சித்திரவதைப்பட்டபின் ஈரற்பெரிய குளம் முகாமுக்கு அனுப்பப்பட்டோம்.

அங்கே இரு வாரமாக எமக்கு சரியாக உணவு எதுவும் தரப்படவில்லை. எம். ஜி. ஆர் உங்களுக்கான உணவுக்குரிய பணத்தை அனுப்பவில்லை என அங்கிருந்த இராணுவத்தினர் கிண்டல் செய்தனர்.

**பூஸாவில்**

அங்கிருந்து பூஸா முகாமுக்கு அனுப்பப்பட்டோம்.

சிறை முகாம்களிலே மிக மோசமான சித்திரவதைகளை நாம் அனுபவித்தது அங்கேதான்.

அங்கே 8 ஆயிரம் பேர்வரை சிறையிருந்தோம். ஒரு பெரிய அறையில் 150 பேர் வரை அடைத்து வைக்கப்பட்டனர்.

இயற்கைக் கடன்களை அதற்குள்ளேயே கழிக்க வேண்டும்.

ஓர் அகப்பை சோறு மட்டும் உணவாகத் தருவர்.

மாதக்கணக்காக குளிப்பு இல்லை தொற்று நோய்கள் ஏராளம். மருத்துவ வசதிகள் கிடையாது.

**மனநோயாளி**

பூஸாவில் மீண்டும் சித்திரவதை செய்து வாக்குமூலம் எடுத்தனர்.

குறடு போன்ற கவ்வியால் நாக்கை கவ்வி இழுப்பார்கள்.

இதனால் உணவு உட்கொள்ள முடியாத வேதனை.

அங்கே சித்திரவதைகளை அனுபவித்தவர்கள் ஒன்றில் மனநோயாளிகளாக அல்லது நிரந்தர நோயாளிகளாகவே மாறிவிடுவர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த பாலன் எனும் இளைஞன் நிரந்தர பைத்தியமாகி விட்டான்.

**கோடரி காம்புகள்**

சித்திரவதையின் போது இறந்த இரு இளைஞர்களை தப்பி ஓட முயன்றதாக கூறி சுட்டுப் போட்டனர்.

எம்முடன் சில தமிழ் இரகசியப் பொலீஸாரும் கைதிகள் போல் இருந்து இரகசியங்களை அறியமுற்படுவர்.

அவர்களை நாம் இனம் கண்டு கொண்டாலும் அவர்களையிட்டு எம்மால் கோபப்படவும், சோகப்படவுமே முடிந்தது கண்டிக்கவோ, தண்டிக்கவோ முடியவில்லை.

**பெண் கைதிகள்**

பூஸாவில் பெண்கைதிகளையும் வைத்திருந்தனர். அவர்கள் படும் சித்திரவதைகளை [illegible] வர்த்தால் [illegible] [illegible]

பூஸா முகாமிலிருந்து வெலிக்கடைக்கு இடமாற்றம் பெற்றோம்.

அங்கேயும் தொடர்ந்தும் உதைபட்டோம் வதைபட்டோம் உடம்பு வதைகளை வாங்கும் அளவுக்கு மரத்துப்போனது.

சிறை உணவை வயிறு சேமிக்காமல் சமிக்கப் பழகிக் கொண்டது.

**உண்ணாவிரதம்**

உடம்போடு சேர்த்து உள்ளமும் மரத்துப் போனதால் அங்கே சிறையில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போர் ஒன்றை சென்ற ஆண்டு நடத்தினோம்.

போராடிய குற்றத்திற்காக சிறை சென்றவர்கள் அங்கேயும் உண்ணாவிரதமிருந்து போராடுவதென்றால் அதற்கு எத்துணை துணிச்சல் வேண்டும்.

அந்த உண்ணாவிரதம் முழுமையாக நடைபெற விட்டாலும், சில சலுகைகளை எமக்கு அது பெற்றுத் தந்தது.

எமது விலாசங்களை பெற்றோரும், அவர்களது முகங்களை நாமும் 18 மாதங்களின் பின் காணக்கூடியதாக இருந்தது.

**வழக்கு தாக்கல்**

என்னுடன் 250 பேருக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது அதில் நிரபராதியென தீர்ப்பளிக்கப்பட்டு நான் விடுதலை செய்யப்பட்டேன்.

ஒன்பது பிள்ளைகளின் தந்தை ஒருவருக்கு பத்து வருட சிறைவாசமும், 3 பிள்ளைகளின் தாய்க்கு 5 வருட சிறைவாசமும் கிடைத்தன.

மேலும் சுமார் 3 ஆயிரம் பேர் — 12 வயது முதல் 77 வயதானவர்கள் — [illegible] எங்கேயென்ற விவரமுமின்றி அங்கு உள்ளனர்.

# மூண்ட போர் தொடர்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சேனை போர்க்களம் புகுந்து வெடிமுழக்கம் செய்தது.

புதிய பெருஞ்சேனையைக் கண்டதும் பறங்கித் தளபதி அன்ரு பூர்த்தாடுக்கு மாண்ட உயிர் மீண்டது போலாகி விடுகிறது... புதுத்தென்பு பிறக்கிறது. அவசரமவசரமாக அவர்களுடன் உரையாடுகிறான் நிலைவரங்களை விளக்குகிறான்... இறந்துபட்ட பறங்கியரின் உடல்கள் அப்புறப்படுத்தப்படும் அதே வேளை பறங்கியரின் பெரிய துப்பாக்கி அணியொன்று முன்னேவந்து நிற்கிறது... பின்னணியில் பறங்கியரின் எடுபிடிகள் வெற்றுத் துப்பாக்கிகளுக்கு வெடி மருந்து நிரப்பிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்... போர் நிலைவரங்களைக் கேட்டறிந்த புதிய பறங்கிச்சேனை கொதிப்படைகிறது. தமது ஏற்பாடுகளின்படி இம்முறை நல்லூர்ச் சேனையை வெற்றி கொண்டு விடலாமென இறுமாப்பெய்தி நிற்கிறது பறங்கித் தளபதி அன்ரு பூர்த்தாட் சேனை அணிகளுடன் மாறிமாறி உரையாடிக் கொண்டு நிற்கிறான்.

இவை யாவற்றையும் தூரத்தே நிலை கொண்டிருக்கும் நல்லூர்ச் சேனை மிக உன்னிப்பாக அவதானித்த வண்ணம் நிற்கிறது. போர்க்களத்தில் அங்குமிங்குமாக ராஜநடை போட்டு வரும் தன் வெண்புரவி மீது அமர்ந்திருந்த சங்கிலி மன்னன் ஒரு கணம் நல்லூர்ப் போர் வீரர்களை நோக்குகிறான்...

அவனது உதடுகளில் வீரப்புன்னகை இழையோடுகிறது... சேனை வீரர்களிடம் ஆயுதங்களை மாற்றிக் கொள்ளும்படி ஆணையிட்ட சேனைத் தளபதி வீரமாணிக்கதேவன் ‘மன்னனை நெருங்கிவந்து வேந்தே! வெள்ளையர்கள் தரங்கம்பாடியிலிருந்து வந்திருக்கிறார்கள்’ என்கிறான்.

அதற்கு சங்கிலி மன்னன் ‘அறிவேன், இவர்களுக்கும் நாம் மங்களம் பாடி அனுப்ப வேண்டியதுதான்... ஆயினும் இவர்களை நாம் நுழைய விட்டிருக்கக் கூடாது... முதன் நாள் பண்ணைக் காட்டில் பதுங்கியிருந்த பறங்கிச் சேனையைப் போருக்கு அழைத்தேன்... கோழைகள் தூது அனுப்பிவிட்டுத் தான் போருக்கு வந்திருக்கிறார்கள். அதன் நிமித்தம் அடுத்தநாள் நெடுந்தீவிலிருந்து பறங்கிப்படை யொன்று வந்தது... இன்று தரங்கம்பாடியிலிருந்து புதிய பெருஞ்சேனை வந்துள்ளது இதை அனுமதித்துக் கொண்டிருந்தால் நாளை கள்ளிக்கோட்டையிலிருந்தும் நாளை மறுநாள் கோவையிலிருந்தும் அதற்கப்புறம் போர்த்துக்கல் நாட்டிலிருந்தும் பறங்கிப்படை வந்து கொண்டேயிருக்கும்... முடிவே இராது’ என்றான்.

தளபதி: அவர்களுக்கு இதுவே தொழில் மன்னா.

மன்னன்: ஆம், நாடு பிடிக்க நாடோடிகளாய் அலையும் நச்சுக் கும்பல்... நாசகாரக் கூட்டம்...... அவர்களை வேரோடும் வேரடி மண்ணோடும் கெல்லி எறிய வேண்டும் ... வேறுவழியே இல்லை...

(இச்சமயம் தூரத்தே இடப்புறமாகப் பறங்கியரால் குதிரைக் காரதையில் கொண்டுவரப்பட்ட பொதிகள் இறக்கப்படுதைக் கண்ணுற்ற தளபதி மன்னனுக்கு அதைச் சுட்டிக் காண்பிக்கிறான். (வளரும்)

# எழுதாமல் இருந்தாலும் எழுத்தாற்றலை வளர்த்த எழுத்தாளர் ‘ஈழத்துச் சோமு’

‘ஈழத்துச் சோமு’ என்ற திரு. நா. சோமகாந்தன் ஈழத்தில் குறிப்பிடத்தக்க தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர்.

எழுத்தாளர்கள் மத்தியிலும் இவர் ஒரு தனித்துவம் வாய்ந்தவர். எழுத்தாளர் இயக்கங்களை இயக்கி வைக்கும் தனிச்சிறப்பு இவருக்குரியது.

அறுபதுகளுக்கு முன்னரே சிறுகதைகள் எழுதத் தொடங்கி விட்ட திரு. சோமகாந்தன் அறுபதுகளில் நூற்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் கலைஞர்களை ‘சுதந்திரன்’ இதழ் மூலம் நாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இவருக்குள்ளே பொங்கிக் கொண்டிருந்த எழுத்தார்வம் சமீபகாலமாக மிகுந்த வேகத்துடன் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் இவர் எழுதிய ஆகுதி, விடியல் ஆகிய இரு கதைகளும் இலக்கிய அன்பர்களால் மிகவும் பாராட்டப் பெற்றன.

இவர் எழுத ஆரம்பித்த காலத்திலேயே இவருடைய உள்ளத்தில் முற்போக்குச் சிந்தனைகள் படர்ந்திருந்ததை இவருடைய ஆரம்ப காலக் கதைகளிலிருந்து அறியலாம்.

> திரு. சோமகாந்தன் எழுதிய 11 சிறுகதைகளைக் கொண்ட ‘ஆகுதி’ என்ற நூலின் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. அதனையொட்டி பழம்பெரும் எழுத்தாளர் வரதர் எழுதிய சிறு குறிப்புரையை இங்கு வெளியிடுகிறோம்.

இவர் எழுதாமலிருந்த காலத்திலும் கூட இவரது எழுத்தாற்றல் கணிசமான அளவு வளர்ந்திருப்பதை இவரது சமீபத்திய கதைகளிலிருந்து அறியலாம்.

கால் நூற்றுண்டு முன் இவர் எழுதிய ‘நிலவோ நெருப்போ’ என்ற சிறுகதையிலேயே உழைக்கும் வர்க்கத்தினருக்காகக் குரல் கொடுத்திருக்கிறார்.

‘ஆகுதி’ என்ற கதையில், ஆலயங்களை வியாபாரத் தொழில் நிலையமாக்கும் தர்மகர்த்தாவையும், தமது சொந்த நலன்கள் யாவையும் துறந்து அம்பிகைக்கே அர்ப்பணித்து நிற்கும் பூசகரையும் காண்கிறோம். —இதில் கூட வர்க்க முரண்பாட்டை சோமகாந்தன் எடுத்துக் காட்டுகிறார்.

இப்படி ஒவ்வொரு கதையிலும் சோமகாந்தன் அநீதிக்கு எதிராக கிளர்ந்தெழுகிறார். ஏழைகளுக்காகவும், மிதிக்கப்பட்டவர்களுக்காகவும் நியாயம் பேசுகிறார்.

# செறிந்த அறிவுடன் செயற்றிறன் மிக்கவர் அமரர் கதிர்காமநாதன்

குசா றக்கற்று [illegible]

[illegible] செறிவுக்குத் தக்கண்ணம் வழ்[illegible] [illegible] வணங்க[illegible] படும் படிப்[illegible] கணக்கியல் அறிவுச் செறிவுக்கும் கருப்பொருள் நுண்மதியாளருக்கு [illegible] எனக் காண[illegible] [illegible] [illegible]யும் [illegible] இந்தக் [illegible] [illegible] பெரும் பேறு [illegible] திரு சிற்றம்பலம் சங்கரப்பிள்ளை இயல்பாகப் பல்துறைக் கணக்கியலில் ஆர்வம் கொண்டதன் வழிபரம்பரை தேசத்திலே அரசசேவையில் ஒர் கணக்காளர் பதவியை முதன்மையுடன் பெற்று அந்நெறியிற் பெருமை பெற்றனர். இவர்களின் இருதிரு[illegible] இயல்பாகவே மதிநுட்பம் அமைந்தவரை யிற் கணக்கியற்றுறையை [illegible] கொண்டு மூத்தவர் யாழ். இந்துக் கல்லூரியிலும் கொழும்பு மன் கலைக் கல்லூரியிலும் இளையவர் புனித தோமஸ் கல்லூரியிலும் தேர்வுகளில் வெற்றி பெற்றுப் பல்கலைக் கழக விஞ்ஞான மாணிகளாக விசேட சித்தியும் புல[illegible] [illegible] அனுபவித்தவர்கள்.

இளையோன் முன்னோன் [illegible] முறையை [illegible] தெரியும் [illegible] [illegible] [illegible] விசேட சித்தியும் [illegible] [illegible] பெற்றது [illegible] அமைவத்தின் இலங்கை நிர்வாக அரச சேவைக்கான நுண்மாண்வித்[illegible]

‘‘அங்கமொழி [illegible] அரசர் தொழுதேத்த [illegible] [illegible]கருக்[illegible]’’ அண்மையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த ஞான்று நாதன் நமநமச்சிவாயவே என்று நாடோறும் செங்கிலி ஏத்தி வழிபடவும் தொண்டுப்பணி தொடரவும் நாதனவர்களுக்கு மாத்தான வாய்ப்பு

### நம. சிவப்பிரகாசம்

[illegible] உரிய இம்பெற்றவலையிலே [illegible] செல [illegible] இந்நாட்டு நிர்வா[illegible] செய்த பாக்கியத்தால் அரசாங்க அதிபராகவும் இறைசேரி நீதி [illegible] முன்மையவராக [illegible] இந்த வந்தனர். இந்நாட்டுச் சேவையிலிருந்த பொழுதே [illegible] நாட்டு சேவைக்கு அழைக்கப்பட்டனர்.

புகழ் [illegible] [illegible] அரியனமே [illegible] பொருள் அறிய கந்தக் கடவுளுக்குக் காணிக்கையாக ஒரும் மாணிக்கப் பிரதேச அம்பாந்தோட்டை அதிபராகவும் நாதனுக்கு நற்கதி கிடைத்தது. கதிர்காமநாதன் அடியான் கதிர்காமநாதன் முதல்வனுக்குத் தொண்டாற்றும் அறியும் பெற்றான் ஆதீனச் சாதனைக்கு அரிய தொடர்பு உண்டானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆரோக்கியமான குடும்பம்
ஆனந்தமான குடும்பம்"
ஆரோக்கிய வாழ்விற்கு
மில்க்வைற் மெடிக்கேட்டட் சோப்
வாங்கிப் பாவியுங்கள்.
1 கட்டி விலை ரூ.2/50 மட்டுமே
10 மேலுறைகளை அனுப்பி ஒரு அழகிய
கைலேஞ்சியைப் பெற்றுக்கொள்ளலாம்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

சஞ்சீவி

18 10- 1986 சனிக்கிழமை

"காலம் பெறுமதியானது."
துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப்
பவுடர் பாவியுங்கள்.
450 கிறாம்பெட்டி ரூ.16/- மட்டுமே!
1 வெற்றுப்பெட்டிக்கு 1 அழகிய பொலீத்தீன்
பாக் இனுமாகக் கொடுக்கப்படும்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாண நகரில் புதிதாகப் புறநானூறு படைத்த விடுதலைப் புலிகள்

- இதய நாடி -

**ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தில் புதிய புறநானூறு படைத்தனர் தமிழீழ விடுதலைப் புலிகள். கடந்த செவ்வாய் மாலை இடம்பெற்ற இச்சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மயிர்க்கூச்செறிந்த சம்பவம் பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது.**

கடந்த செவ்வாய்க்கிழமை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புதிய புறநானூறு படைக்கப்பட்டது. படைத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.

'சிங்கத்'தின் குகைக்கே 'புலி' சென்றது.

வேட்டைக்குப் பலியான 'சிங்கங்'களை ஒப்படைத்து விட்டு 'புலி' மிடுக்குடன் திரும்பியது.

மன்னார் அடம்பன் மோதலில் ஸ்ரீலங்கா அரசுச் சிப்பாய்கள் புலிகளிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

பலியான அரசுச் சிப்பாய்களின் சடலங்களில் பதினொறு புலிகளிடம் அகப்பட்டுக் கொண்டன.

இதைவிட இரண்டு சிப்பாய்கள் உயிருடன் சிறை பிடிக்கப்பட்டனர்.

உயிருடன் பிடிக்கப்பட்ட சிப்பாய்களையும் கைப்பற்றப்பட்ட சடலங்களையும், யாழ் மண்ணுக்குக் கொண்டுவராது தடுக்கப் போடப்பட்ட தடைகளைத் தகர்த்து எறிந்து கொண்டு வந்து சேர்த்தனர் புலிகள்.

செவ்வாய் காலை நல்லூரில் 9 சிப்பாய்களின் சடலங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

உயிருடன் சிறை பிடிக்கப்பட்ட சிப்பாய்கள் அங்கு இருத்தப்பட்டனர்.

செவ்வாய் மாலை:

சடலங்களுக்கு என்ன நடக்கும்? இதற்கு பதிலே தெரியாத நிலையில் மக்கள் இருந்தனர். ஆனால் புலிகளின் உயர் மட்டத்தினருக்கும் கோட்டை இராணுவ முகாம் உயர்மட்டத்தினருக்கும் இடையில் தொலைபேசியில் உரையாடல்கள் இடம்பெற்றன. அதன்விளைவாக வானிலே மட்டும் 'வல்லூறு'கள் அடிக்கடி பறந்து மக்களை திகில் கொள்ளச் செய்தன.

அதே நேரத்தில் 'சரித்திரம் படைக்கும் நிகழ்ச்சி' ஆரம்பமாகியது.

எல்வ் வான் ஒன்று கொண்டு வரப்பட்டது. சடலங்கள் பெட்டிகளில் வைக்கப்பட்டு வானில் ஏற்றப்பட்டன.

வானின் முன்னும் பின்னும் புலிகள் ஆயுதபாணிகளாக வாகனங்களில் தொடர்ந்தனர்.

சடலங்கள் ஏற்றப்பட்ட வான் மெயின் வீதிச் சந்தியில் நிறுத்தப்பட்டது.

'சீ பிளேன்' ஒன்று வானில் தோன்றி சிவப்பு நிற 'பாரா லைட்' வெளிச்சத்தைக் காட்டியது.

புலிகள் தரப்பிலும் 'பாரா' வெளிச்சம் காட்டப்பட்டது.

பின்னர் வானை ஓட்டி வந்த புலிகளின் முன்னணி வீரர்களில் ஒருவரான ரஹீம் இறங்கி மெயின் வீதிச் சந்தியில் இருந்து கோட்டை முகாம் நோக்கி நிராயுதபாணியாக நடந்து சென்றார்.

கோட்டைப் பொலீஸ் 'சென்றி' அருகே சென்ற ரஹீம், கோட்டை முகாம் பொறுப்பதிகாரியை பெயர் சொல்லி அழைத்தார்.

பல முறை பெயர் சொல்லி அழைத்த பின்னரே, பொறுப்பதிகாரி வெளியே வந்தார்.

ரஹீம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

கப்டன் கொத்தலாவலை என்று இராணுவ அதிகாரியும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

இருவருமே கைகுலுக்கிக் கொண்டனர்.

சடலங்களைக் கொண்டு வரும்படி ரஹீமை, இராணுவ அதிகாரி கேட்டுக் கொண்டார்.

பின்னர் ரஹீம் தன்னந்தனியனாக மெயின் வீதிச் சந்திக்கு வந்து சிப்பாய்களின் சடலங்கள் இருந்த வானைத் தானே கோட்டைக்குக் கொண்டு சென்றார்.

காத்து நின்ற இராணுவ அதிகாரி. சிக்னல் கொடுத்தார். சில சிப்பாய்கள் வந்தனர்,

வானில் இருந்த பிரேதப்பெட்டிகளை இறக்கி உள்ளே கொண்டு சென்றனர்.

பின்னர் ரஹீம், இராணுவ அதிகாரியுடன் கைகுலுக்கி விடைபெற்றுக் கொண்டார். சில சிப்பாய்களும் தாங்களாக முன்வந்து ரஹீமுடன் கைகுலுக்கிக் கொண்டனர்.

சடலங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் குகைக்கு திரும்பினர்.

வெற்றிப் பெருமிதத்துடன் ரஹீம் வானை ஓட்டிக் கொண்டு கோட்டையில் இருந்து திரும்பினார்.

தொலைபேசி உரையாடல்களில் ஆராயப்பட்ட சடலங்கள் கையளிப்புச் சம்பந்தமான ஏற்பாடுகள், இரு சாராராலும் உணர்ச்சிகள் தளம்பாத 'ஸ்போட்ஸ்மன்' தனத்துடன் பேணப்பட்டன.

நவீன ஆயுதங்களுடன் மெயின் வீதிச் சந்தியில் காத்து நின்ற 150க்கும் அதிகமான புலிகள் ரஹீமை எதிர்கொண்டு வாரிஅணைத்துக் கொண்டனர்.

புலிகள் புதிய புறநானூறு படைத்தனர்.

இத்திகில் சம்பவத்தின் பின்னரும் அரசு ஊதுகுழல்கள் 'மன்னார் அன்ட் கம்பெனி' கதை தான் பேசுகின்றன.

# டிக்ஸிற்-தமிழக பிரமுகர்கள் பேச்சின் அர்த்தம் என்ன?

பெங்களூர்ப் பேச்சுக்களாவது எங்களூர்ப் பிரச்சினைக்கு தீர்வு காணுமா?

இந்தியப் பிரதமரின் கான்பெரா, வெலிங்டன் பேச்சுக்களைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் மத்தியில் மேற் கண்ட கேள்விதான் எழுந்துள்ளது.

இனப்பிரச்சினை, உலகத் தலைநகரங்களில் பேசப்படும் பிரச்சினையாகத்தான் இதுவரை இருந்து வந்து உள்ளது.

''இப்போதுதான் ஆராயக்கூடியதான சமாதான யோசனைகளை இலங்கை அரசு சமர்ப்பித்துள்ளது. இது குறித்து இன்னும் சில விளக்கங்களை நாம் இலங்கை அரசிடம் கேட்க வேண்டியுள்ளது''– என்று கூறியிருக்கின்றார் பிரதமர் காந்தி.

அவ் விளக்கங்களை பெங்களூரில் சந்திக்கும் போது ஜனாதிபதியிடம் கேட்பேன் என்றும் தெரிவித்து இருக்கிறார் இந்தியப் பிரதமர்.

எனவே கன்னடத் தலைநகரான பெங்களூர் சந்திப்புக்கு முன்னர் மூன்றும் கட்டப் பேச்சுக்கள் இலங்கை அரசுக்கும் தமிழர் அமைப்புக்களுக்கும் இடையே இடம் பெறுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

நவம்பர் 13 இல் பெங்களூரில் 'சார்க்' நாடுகளின் உச்சி மாநாடு நடைபெற உள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

அணிசேரா இயக்கத்தின் தலைமைப் பதவியை கடந்த செப்டம்பரில் இந்தியா சிம்பாப்வேயிடம் கையளித்தது.

## சூடும் குளிரும்

அதன் பின்னர் ஹராரேயில் வைத்து இலங்கைக்குச் 'சூடா'கக் கொடுத்தார் பிரதமர் காந்தி.

நவம்பரில் 'சார்க்' நாடுகள் அமைப்பின் தலைமைப் பதவியை இந்தியா ஏற்கப் போகிறது.

இதனிடையில் கடந்த வாரம் கான்பெராவில் வைத்து இலங்கை அரசு பற்றி 'குளிராக' பேசியிருக்கிறார்

பெங்களூர்ச் சந்திப்புக்குத் தயாராகும் சூழ்நிலையை திரு. காந்தியின் கான்பெராப்பேச்சு உருவாக்கியுள்ளது.

## சென்னையில் டிக்ஸிற்

இந்த நிலையில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜோகேந்திர நாத் டிக்ஸிற் சென்னை சென்று இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி தமிழ் நாடு

## உள்ளும் புறமும்

குறுமுனி

அரசுடன் நேரடியாகப் பேச்சுக்களை நடத்திவிட்டு இன்று (சனி) தான் புதுடில்லி செல்கிறார்.

ஐந்து தினங்களுக்கு மேலாக திரு. டிக்ஸிற் சென்னையில் பல சந்திப்புக்களை நடத்தியிருக்கிறார்.

தமிழ்நாடு அரசு அமைச்சர்களுடன் மட்டுமல்ல, தமிழக உள்துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர் ஆகியோருடனும் திரு டிக்ஸிற் பேச்சுக்களை நடத்தியுள்ளார்,

மத்திய அரசு தான் மாநில அரசுடன் நேரடியாக பேச்சுக்கள் நடத்துவது வழக்கம்.

இதுவரை மத்திய அரசின் அமைச்சர்கள், அதிகாரிகள்தான் தமிழ்நாடு அரசுடன் இலங்கைப் பிரச்சினை பற்றி தொடர்பு கொண்டு வந்தார்கள்.

கொழும்பில் உள்ள தனது தூதரைப்போய் தமிழ்நாடு அரசுடன் நேரடியாகப் பேசும்படி இந்திய அரசு இம்முறை பணித்துள்ளது,

இதன் அர்த்தம் என்ன? இந்திய ராஜதந்திரத்தின் ஒரு பகுதியா இது? என்று கேள்வியும் கொழும்பு வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டுக் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு இன்று புதுடில்லி செல்லும் திரு. டிக்ஸிற் அடுத்த வாரம் பிரதமர் காந்தி, மற்றும் அமைச்சர் அதிகாரிகளைச் சந்திப்பார்.

அடுத்த வாரம்தான் போராளிகளின் நிலையையும் தமிழக முதலமைச்சர் பிரதமரிடம் தெரிவிப்பார்.

மூன்றும் கட்டப் பேச்சுக்கள் 'சார்க்'மாநாட்டுக்கு முன்னர் நடைபெறுமா? அல்லது பின்னர் நடைபெறுமா?

இந்த வாரத்தில் புதுடில்லி இதை நிர்ணயிக்கும் என்று தெரிகிறது.

# உலக உலா

ஏன்.பி.சீலன்

# பங்களாதேஷில் மீண்டும் அரசியல் ஸ்திரம் ஏற்படுமா? எர்ஷாட்டின் வெற்றி நிலைக்குமா?

உபகண்ட நாடுகளில் ஒன்றான பங்களாதேஷில் கடந்த புதன்கிழமை ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹுசெயின் முகம்மத் எர்ஷாட் உட்பட 12 பேர் போட்டியிட்டனர்.

நாடு சுதந்திரம்பெற்ற பின்னர் நடைபெற்ற மூன்றாவது தேர்தல் இது ஆகும்.

பங்களாதேஷ் தேசியக் கட்சி, அவாமிலீக் ஆகிய பிரதான எதிர்க்கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரித்திருந்தன.

ராணுவச் சட்டத்தை நீக்காமல் தேர்தல் வைத்ததே எதிர்க்கட்சிகளின் பிரதான குற்றச்சாட்டு ஆகும்.

தேர்தல் முடிவடைந்த பின்பு ராணுவச் சட்டம் நீக்கப்படு என்றும் ஜனநாயக ஆட்சிமுறை அமுல் செய்யப்படும் என்றும் முகம்மத் எர்ஷாட் வாக்குறுதி அளித்திருந்தார்.

எனினும் இதனை ஏற்றுக்கொள்ள மறுத்து பிரதான எதிர்க்கட்சிகள் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தன. வேலைநிறுத்தத்துக்கும் அழைப்பு விடுத்திருந்தன, இதன் எதிரொலி தேர்தல் சமயம் வன்செயல்கள் உருவெடுத்தன. நூற்றுக் கணக்கானோர் கைதாகினர்.

எதிர்பார்த்தது போன்று தேர்தலில் முகம்மத் எர்ஷாட் வென்றுவிட்டார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தலில் மோசடி செய்து வென்றுவிட்டார் என்று வழமை போல் எதிர்க் கட்சிகள் குற்றஞ் சாட்டிஉள்ளன.

ஆட்சியில் இருப்போர் தம் அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றி பெறுவதும் எதிர்க்கட்சிகள் மோசடிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதும் தற்போது புதிய ஜனநாயக சம்பிரதாயமாக மாறி வருகிறது.

ஏற்கெனவே பிலிப்பீன்ஸ், பாகிஸ்தான் ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்தல்கள் இதற்கு உதாரணம் ஆகும்.

பங்களாதேஷ் 1971-ம் ஆண்டுக்கு முன்னர் கிழக்குப் பாகிஸ்தானாக இருந்தது.

இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுத்த பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவிலிருந்து இரு பகுதிகளைப் பிரித்து பாகிஸ்தான் என்ற நாட்டை உருவாக்கிக் கொடுத்தனர்.

வங்கத் தந்தை முஜிபுர் ரஹ்மானின் தனி நாடு போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த சமயம் 1971ஆம் ஆண்டு இந்தியப் படைகள் கிழக்குப் பாகிஸ்தானுக்குள் நுழைந்து இதனை வெற்றி கொண்டன.

இப்படியாக உருவான பங்களாதேஷில் 1975-ம் ஆண்டு முஜிபுர் ரஹ்மான் படுகொலை செய்யப்படும் வரை ஸ்திரமான ஆட்சி நிலவி வந்தது. சர்வதேச அரங்கில் நன்மதிப்பு இருந்து வந்தது.

முஜிபுர் படுகொலைக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த தலைவர்களில் லெப்டினன்ட் ஜெனரல் ஹுசெயின் முகம்மத் எர்ஷாட் மட்டும் நீண்ட காலம் பதவியில் இருந்துள்ளார்.

பாகிஸ்தானில் ஸியா–உல்– ஹக் சொல்வது போன்று ஜனநாயக ஆட்சிமுறையை மீண்டும் ஏற்படுத்துவதாக இவரும் அடிக்கடி சொல்லி வந்தார். இப்படிச் சொல்லிக்கொண்டே கடந்த நாலரை வருடகாலமாக தமது அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டு தேர்தலை நடத்தி அதில் வெற்றியும் ஈட்டி உள்ளார்.

எதிர்க்கட்சிகள் ஒத்துக்கொள்ளாத இந்த வெற்றி நாட்டில் அரசியல் ஸ்திரத்தைக் கொண்டுவர உதவாது என்பது மட்டும் நிச்சயம்.

## கருத்துக் ---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் கைவிட்டு ஆப்பு இழுத்த குரங்கின் நிலைக்கு ஆளாகி உள்ளனர்.

இவர்களுக்கு உதவ வேண்டியது வ. பி. போ. சபை உயர் பீடத்தின் பொறுப்பு. அந்தப் பொறுப்பைச் சரிவரச் செய்து முடிக்க அதற்கு உதவுவது யார் என்பதே கேள்வி.

இது சம்பந்தமாக உண்மை நிலையயாவது சம்பந்தப் பட்டவர்களுக்கு நிர்வாகம் அறிவிக்க வேண்டும். காரியம் நடக்குமா?

மானிப்பாயில்

பாதுகாப்பான சூழலில் சர்வதேச தொலைத்தொடர்பு நிலையம்
உலகின் எந்தப் பாகத்துடனும் நொடிப் பொழுதில் தொடர்பு கொள்வதற்கு

★ International Communication Complex ★
MANIPAY.

★ உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்பு
★ ரெலக்ஸ் வசதி
★ இரவு-பகல் எந்நேரமும் சேவை

★ தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப்பட்ட ஒரே நிறுவனம்
★ வெளியூர், வெளிநாடுகளிலிருந்து உங்களுக்கு வரும் ரெலக்ஸ் தொலைபேசிச் செய்திகள் உங்கள் வீடுகளில் விநியோகிக்கப்படும்

இன்ரநாஷனல்
கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்
282 A, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.

★ குளிரூட்டப்பட்ட அறைகளில் இதமான சேவை
★ வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும் போது இலங்கை நாணயத்தை வீணாக்காமல் வெளிநாட்டு நாணயத்தில் கட்டணம் செலவு செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான ஒழுங்குகளை நேரில் செய்து கொள்ளலாம்.
★ உங்கள் சேவையே எமது நிறைவு.

## நீத்தார் பட்டியல்

### திருமதி பேள் ரெஜீனா அகஸ்தீன் (சரஸ்)

இல, 7 விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. V S S அகஸ்தீன் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்) அவர்களின் அன்பு மனைவி திருமதி. பேள் ரெஜீனாஅகஸ்தீன்(சரஸ்) 15 — 10 — 1986 அன்று யேசுவினடி சேர்ந்தார்.

அன்னாரின் பூதவுடல் 18 — 10 — 1986 பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து பாண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலியின்பின் யாழ். புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களின்
வெளிவாரிப்
பட்டமாணிப் பரீட்சைகள்

கல்வியாண்டு 87 / 88

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கலைமாணி (B.A.) விஞ்ஞானமாணி (B.Sc.) (கணிதம்)
வர்த்தகமாணி (B.Com.) சட்டமாணி(LL.B.)

விண்ணப்பங்கள் ஒக்டோபர் 30ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களையும்; விபரத்திரட்டுகளையும் 'பதிவாளர்' அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் என்ற பெயருக்கு ரூபா 10இற்கான காசுக்கட்டளையுடன் சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

* க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகளை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்கள் முடிவு கிடைக்கும்வரை பயிற்சி வகுப்புகளுக்கு இலவசமாக அனுமதிக்கப்படுவர்.

பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 2 - 11 - 86

பதிவாளர்:
அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
A. S. சங்கரப்பிள்ளை (கட்டடம், 1ம் மாடி.)

கிளை:
101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை, 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி- 18 — 10 — 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org